இந்த இடத்தில் விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL



மலர்:- 31, 01 நவம்பர் 2024 இதழ்:- 22

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600



NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com


## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 23 செப்டம்பர் 2024 முதல் 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600


Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com


## பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் இருக்கும்! விஜய ஹேரத்தின் கூற்றால் அநுராவின் சாயம் வெளுக்குமா?



பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பின்னரே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதா என்பது குறித்து அரசாங்கம் இறுதி தீர்மானத்தை எடுக்கும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)


GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife
Foresters


ஈழநாடு மின்னிதழில் வாசிக்க
eelanadu.ca


BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED


## அநுரவுக்கு அவகாசம் தேவை

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் அவர் உட்பட மூவரை அமைச்சர்களாகக் கொண்டு தற்போது பதவியில் இருப்பது ஓர் இடைக்கால அல்லது காபந்து அரசாங்கமே. (5ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு நீதிமன்றங்களால் ஒரு போதும் நீதியை வழங்க எம்மால் முடியாது - ஜே.வி.பி. அமைப்பாளர் பிமல் தெரிவிப்பு!

வெளிநாட்டுத் தலையீடின் கீழ் எமது நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்களால் எங்களுக்கு ஒரு போதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம். சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (4ம் பக்கம் பார்க்க)





## மாவீரர்களின் தியாகங்களை வியாபாரம் ஆக்காதீர்கள்! 3 மாவீரர்களை ஈன்ற சிங்களத் தாயின் வேண்டுகோள்!

மாவீரர்களின் தியாகங்களை அரசியல்வாதிகள் வியாபாரம் ஆக்காதீர்கள். மாவீரர் துயிலும் இல்லங்களில் நிம்மதியாக விளக்கேற்றுவதற்கு (5ம் பக்கம் பார்க்க)


KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF
# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com
*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

### Simcoe St N. & Conlin Rd

**Oshawa** **$279,000**
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


### Sheppard Ave & Allen Rd

**Toronto** **$619,000**
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University


### Neilson/Tapscott


**Scarborough** **$445,000**
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC


### Kennedy Rd / Hwy 401


**Scarborough** **$699,000**
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!

### Sheppard & Neilson

**Malvern** **$699,900**
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!

### Simcoe St N/ Brittania Ave

**Oshawa** **$770,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse


### McLevin Ave & Morningside

**Malvern** **$880,000**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement


### Townline Rd & Shankel Rd

**Oshawa** **$999,900**
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407


### Sheppard Ave E / Neilson Rd

**Scarborough** **$842,000**
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED


### Church St N & Rossland Rd W


**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout

### Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors

### Kellough St/ Mcneil St

**Innisfil** **$1,295,000**
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

### Ninth Line/Donald Cousens

**Markham** **$630,000**
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

### Mara & King

**Beaverton** **$729,800**
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

### Finch Ave E/ Morningside Ave
FOR LEASE

**Scarborough** **$2,500**
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

### Scarborough Golf/Lawrence Ave
FOR LEASE

**Scarborough** **$1,900**
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் இருக்கும்!

## விஜய ஹேரத்தின் கூற்றால் அநுராவின் சாயம் வெளுக்குமா?



பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் புதிய நாடாளுமன்றம் தெரிவு செய்யப்பட்ட பின்னரே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதா என்பது குறித்து அரசாங்கம் இறுதி தீர்மானத்தை எடுக்கும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் தற்போது ஆராயவில்லை அது தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என தெரிவித்துள்ள அமைச்சர் திருத்தங்களை முன் மொழிந்து அவற்றை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டால் மாத்திரமே பயங்கரவாத தடைச்சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து பல காலமாக உள்ளது புதிய நாடாளுமன்றத்தின் அமர்வுகள் ஆரம்பமான பின்னரே இது குறித்து தீர்மானிப்போம் என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை தேசிய மக்கள் சக்தி ஏன் தொடர்ந்தும் தக்க வைக்க விரும்புகின்றது? - அம்பிகா



பயங்கரவாத தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமை தராதரங்களை பின்பற்றியதாக காணப்படவில்லை என ஐக்கிய நாடுகள், இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உட்பட பலவற்றின் ஆய்வுகள் தெரிவித்துள்ளதை அனுரகுமார திசநாயக்க மறக்க முடியாது என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்

மனித உரிமைகள் விடயத்தில் குறைபாடுள்ள சட்டத்தை தேசிய மக்கள் சக்தி தக்க வைக்க விரும்புகின்றது என அந்த கட்சியால் தெரிவிக்க முடியுமா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்

சமூக ஊடக பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. பயங்கரவாத தடைச் சட்டத்தில் பிரச்சினையில்லை, மாறாக அது தவறாக பயன்படுத்தப்படுவதே பிரச்சினை என தேசிய மக்கள் சக்தி தெரிவிக்கின்றது பயங்கரவாத தடைச் சட்டத்தை தொடர்ந்து தக்கவைப்பதற்கான காரணமாக தேசிய மக்கள் சக்தி இதனை தெரிவிக்கின்றது.

பயங்கரவாத தடைச் சட்டம் பத்திரிகையாளர்கள் சிவில் சமூகத்தினருக்கு எதிராக பயன் படுத்தப்பட்டதே பிரச்சினைக்குரிய விடயம் என தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளதுடன் எதிர்காலத்தில் அது இடம் பெற அனுமதிக்க மாட்டோம் என குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டம் சர்வதேச மனித உரிமை தராதரங்களை பின்பற்றியதாக காணப்படவில்லை என ஐக்கிய நாடுகள் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உட்பட பலவற்றின் ஆய்வுகள் தெரிவித்துள்ளதை அனுரகுமார திசநாயக்க நீங்கள் மறக்க முடியாது.

இலங்கை இந்த சர்வதேசசட்டங்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. இதன் காரணமாக அதனை கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் சிறைச்சாலை ஆய்வு உட்பட பல ஆய்வுகளில் கிடைத்த ஆதாரங்கள் பயங்கரவாத தடைச் சட்டம் தமிழர்கள் முஸ்லீம்களிற்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இவர்கள் பத்திரிகையாளர்களே அல்லது சிவில் சமூகத்தினரோ இல்லை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

ஆகவே இது பழிவாங்குவது குறித்தது இல்லை மாறாக ஆனால் ஆழமாக வேரூன்றிய இனமத ரீதியான பாகுபாடுகளை அடிப்படையாக கொண்டது.

பயங்கரவாததடைச்சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுப்போம் என அரசாங்கம் தெரிவிக்கின்ற அதே வேளை பொலிஸார் உரிய நடைமுறைகளை புறக்கணித்தே அதிகளவில் செயற்படுகின்றனர் என்பது வெளிப்படையாக தெரியும் விடயம்.

பயங்கரவாத தடைச்சட்டம் மூலம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள பரந்துபட்ட அதிகாரங்கள் துஸ்பிரயோகங்களையும் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தலையும் அதிகரிக்கின்றன தீவிரப்படுத்துகின்றன.

மனித உரிமை மீறல்களை அதிகரிக்க கூடிய ஏனையபல ஏற்பாடுகள் பயங்கரவாத தடைச் சட்டத்தில் காணப்படுகின்றன. அடிப்படை உரிய செயல்முறைகளை குறை மதிப்பிற்கு உட்படுத்துவதால் சட்டமே ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது,

மனித உரிமைகள் விடயத்தில் குறைபாடுள்ள சட்டத்தை தேசிய மக்கள் சக்தி தக்கவைக்க விரும்புகின்றது என அந்த கட்சியால் தெரிவிக்க முடியுமா?

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.


அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# வெளிநாட்டு நீதிமன்றங்களால் ஒரு போதும் நீதியை வழங்க எம்மால் முடியாது - ஜே.வி.பி. அமைப்பாளர் பிமல் தெரிவிப்பு!



வெளிநாட்டுத் தலையீடின் கீழ் எமது நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்களால் எங்களுக்கு ஒரு போதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம். சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் 27 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தேசிய மக்கள் சக்திக்கு சிங்களக் கட்சி என்ற ஒரு குற்றச்சாட்டு தமிழ் மக்கள் மத்தியில் பரப்பப்படுகின்றது. நாங்கள் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் எமது கட்சி வேட்பாளர்கள் அனைவரும் யாழ்ப்பாணம், கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

இதே போல் எங்கள் மேல் மற்றும் ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தியானது சர்வதேச விசாரணைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகின்றது.

எங்கள் மேல் விமர்சனங்களை முன் வைப்பவர்களிடம் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். அமைச்சரவைத் தீர்மானங்களை முழுமையாக வாசித்து விட்டு எங்கள் மீது விமர்சனங்களை முன் வையுங்கள்.

எங்களுக்கு எதிராக தமிழ் மக்களிடம் கூறுவதற்கு எந்த விடயமும் கிடையாது. இதனால் சர்வதேச விசாரணை என்ற விடயத்தை இவர்கள் கையில் எடுத்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்களை இனவாத ரீதியாகச் சூடாக்கி அதில் குளிர்காய்கின்ற வேலையைத் தமிழ்க் கட்சிகள் செய்து வருகின்றன. எங்கள் மீது இனவாத சாயத்தைப் பூசுகின்ற நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கியுள்ளார்கள்.

வெளிநாட்டுத் தலையீட்டின் கீழ் எங்களுடைய நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. வெளிநாட்டு நீதிமன்றங்களால் எங்களுக்கு ஒரு போதும் நீதியை வழங்க முடியாது என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்கின்றோம்.

சர்வதேச நீதிமன்றங்களால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை எட்டி உதைத்து விட்டு இன்று உலக நாடுகள் செயற்படுகின்றன. உதாரணமாக பலஸ்தீன பிரச்சினையைக் குறிப்பிடலாம். அங்கு இலட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதற்கு எதிராக சர்வதேச நீதிமன்றங்கள் தீர்ப்புகளை வழங்கியுள்ள போதும் அதனை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது. இப்படியான நிலைமை காணப்படுகையில் சர்வதேச நீதிமன்றத்திடம் சென்று நீதியைப் பெறுவது என்பது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதற்கு ஒப்பானது.

மேலும் புலம்பெயர் தமிழர்களிடமும் ஒரு கோரிக்கையை முன் வைக்கின்றோம். ஒரு சில அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தாங்கள் புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் எனக் கூறி அரசியல் சித்து விளையாட்டுக்களை மேற் கொள்கின்றார்கள்.

குறித்த கட்சிகளுக்கு எவ்வாறு நிதி சேகரிப்பு நடைபெறுகின்றது என்பது சந்தேகத்துக்கிடமானதாகும். வெளிநாடுகளில் இருந்து பணத்தைக் கொண்டு வந்து 70 வருடங்களுக்கு மேலான போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகின்ற கீழ்த்தரமான அரசியலை சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் செய்கின்றன.

இவை அருவருக்கத்தக்க செயற்பாடுகளாகும். எனவே, புலம்பெயர் தமிழர்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றோம் எங்களுடைய பெயரைத் துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளிக்க வேண்டாம் என்றார்.


எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்

32வது ஆண்டு விழா 23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை

சங்கீத சங்கமம் 2025

விபரங்களுக்கு:- 416 841 9600





கனடா - அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அனைத்து அம்பாள் அடியார்களிற்கும் வணக்கம்!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி — நிர்வாகசபை

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# மாவீரர்களின் தியாகங்களை வியாபாரம் ஆக்காதீர்கள்! 3 மாவீரர்களை ஈன்ற சிங்களத் தாயின் வேண்டுகோள்!

மாவீரர்களின் தியாகங்களை அரசியல்வாதிகள் வியாபாரம் ஆக்காதீர்கள். மாவீரர் துயிலும் இல்லங்களில் நிம்மதியாக விளக்கேற்றுவதற்கு அனுமதியை பெற்றுத் தாருங்கள் வேறொன்றையும் நாங்கள் உங்களிடம் கேட்க வில்லையென மூன்று மாவீரர்களைப் பெற்ற தாய் நடராசா சீலாதேவி கோரிக்கை விடுத்துள்ளார்.

நான் சிங்கள பெண்ணாக இருந்தாலும் இந்த மண்ணிலேயே சாவேன். அதுவரை நிம்மதியாக எமது பிள்ளைகளுக்கு விளக்கேற்ற விடுங்கள் என மூன்று மாவீரர்களின் தாயும் சிங்கள இனத்தை சேர்ந்தவருமான சீலாவதி நடராசா தெரிவித்துள்ளார்.




யாழ் ஊடக அமையத்தில் 27 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வீட்டுக்கு வந்து தமக்கு வாக்களியுங்கள் என்பார்கள். அதற்கு பின்னர் எவரும் திரும்பி பார்க்க மாட்டார்கள். இந்த மண்ணுக்காக மூன்று மாவீரர்களை கொடுத்தேன். நான் தற்போது மிகவும் வறுமையில் உடல் நலிவுற்று இயலாமல் இருக்கின்றேன்.

ஆனால் அரசியல்வாதிகள் எமக்கு உதவி செய்யத் தேவையில்லை. மாவீரர்களின் பெயர்களை சொல்லி அரசியல்வாதிகள் குளிர்காய வேண்டாம். மாவீரர் துயிலும் இல்லங்கள் காடாகி உள்ளது. மாவீரர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்களையே இணைத்து மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவை உருவாக்க வேண்டும்.

நான் சிங்கள பெண்ணாக இருந்தாலும் இந்த மண்ணிலேயே சாவேன். அதுவரை நிம்மதியாக எமது பிள்ளைகளுக்கு விளக்கேற்ற விடுங்கள். மாவீரர்களின் பெயரைச் சொல்லி எல்லாம் செய்வோம் எல்லாம் செய்வோம் என அரசியல்வாதிகள் எவரும் வரக்கூடாது என்றார்

# தமிழரசுக்கட்சியினர் எவரும் பார் லைசன்ஸ் பெறவில்லையா? சுதந்திரனிடம் சவால் விடும் கீதநாத் காசிலிங்கம்!



இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் எவரும் பார் லைசன்சை பெறவில்லை என்பதை சத்தியக் கடதாசியின் ஊடாக வெளிப்படுத்த முடியுமா என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் கீதநாத் காசிலிங்கம் எம்.ஏ.சுமந்திரனிடம் சவால் விடுத்துள்ளார்.

கட்சியில் சிலர் பார் லைசனை பெற்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அது கட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு உடனடியாக பதில்கள் அளிக்கப்பட வேண்டும் என்றும் பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் 28 ஒக்டோபர் 2024 திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இந்த சவாலை விடுத்துள்ளார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

பார் லைசன்ஸ்சோ சாராயக் கடைகளோ யாருக்கும் இதுவரையில் பெற்றுக் கொடுக்கவில்லை எனச் சத்தியக் கடதாசி ஒன்றை அண்மையில் கொடுத்திருந்தேன். அதேபோல் என்னுடைய சக வேட்பாளர்கள் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இத்தகைய சத்தியக் கடதாசியை கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன். ஏனென்றால் தற்போது பரவலாகப் பேசப்படுகின்ற பார் லைசன்ஸ் விவகாரத்தில் யார், யார் இந்த பார் லைசன்ஸ்சை பெற்றுள்ளார்கள் என்று மக்களுக்குத் தெரிய வேண்டும்.

மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இவர்களை நாடாளுமன்றம் அனுப்பியது சாராயக் கடைகளை வாங்குவதற்காக அல்ல. ஆகவே, யார் யார் வாங்கினார்கள் என்பது வாக்களித்த மக்களுக்கு கட்டாயம் தெரிய வேண்டும். ஆனால், இந்த உண்மையை வெளிப்படுத்த வேண்டிய புதிய ஆட்சியாளர்கள் கூட அதனை வெளிப்படுத்தத் தயங்குகின்ற நிலைமைதான் உள்ளது.

இவர்கள் ஏன் தயங்குகின்றார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் முக்கியமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து வேட்பாளர்களும் பார் லைசன்ஸ் வாங்கவில்லை என சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும்.

ஆனால் இதுவரைக்கும் எவரும் அப்படியான சத்தியக் கடதாசியை கொடுக்கவில்லை. ஒவ்வொரு நாளும் சாராயக் கடை தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களில் கதைத்துக் கொண்டிருக்கின்றார். எங்களுக்கு அவர் ஒரு முன்மாதிரியான அரசியல்வாதி. அவரைப் பார்த்துத் தான் நாங்களும் சில விடயங்களை அதிலும் அவருடைய உரைகளில் தான் படித்துக் கொள்கின்றோம். எனவே நாம் கேட்டது போல அவர் முன்மாதிரியாக ஒரு சத்தியக் கடதாசியைக் கொடுக்க வேண்டும். சாராயக் கடை சம்பந்தமாக உண்மை தெரிய வேண்டும் என்று ஜனாதிபதியிடமும் சென்று கதைத்திருந்தவர் அவர்.

அவ்வாறு முதலில் அவரே ஒரு சத்தியக் கடதாசியைக் கொடுத்து அவரது கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் சத்தியக் கடதாசியைக் கொடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனை முன் மாதிரியாகச் செய்யுங்கள் என சுமந்திரனை மரியாதையுடன் கேட்கின்றோம்.

## சம்பள அதிகரிப்புக்கு ரணில் பணம் ஒதுக்கவில்லை!

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்காக இதற்கு முன்னர் இருந்த அரசாங்கத்தினால் நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை என்று பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாதுக்க பிரதேசத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் உறுதியளித்த போதிலும் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை தமது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் வினைத்திறன் மிக்க அரச சேவையொன்று உருவாக்கப்படும் எனவும் பிரதமர் இதன் போது உறுதியளித்துள்ளார்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அரச ஊழியர்களுக்கு 10ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்புக்கு தேவையான ஒதுக்கீடுகளை செய்திருந்ததாக மீண்டும் சுட்டி க்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அநுரவுக்கு அவகாசம் தேவை

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையில் அவர் உட்பட மூவரை அமைச்சர்களாகக் கொண்டு தற்போது பதவியில் இருப்பது ஓர் இடைக்கால அல்லது காபந்து அரசாங்கமே. இரு தசாப்தங்களுக்கு மேலாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்த போதிலும், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் 2004 அரசாங்கத்தில் ஓர் அமைச்சராகப் பதவி வகித்தமையைத் தவிர ஆட்சி அனுபவம் எதுவும் இல்லாதவர் ஜனாதிபதி திஸநாயக்க.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்று வெறுமனே ஒரு மாத காலம் மாத்திரமே கடந்த நிலையில் திஸநாயக்கவின் அரசாங்கத்தின் செயல்பாடுகளில் பிழை கண்டு பிடிப்பதில் எதிரணிக் கட்சிகள் குறிப்பாக அவரிடம் தோல்வி கண்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள்.

திஸநாயக்கவைப் போன்று பதவிக்கு வந்த ஒரு மாத காலத்துக்குள் பெருமளவுக்கு எதிர்மறையான விமர்சனங்களுக்கு உள்ளான அனுபவம் வேறு எந்த முன்னாள் ஜனாதிபதிக்கும் இருந்ததில்லை. பொருட்களுக்கு மக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நிற்கும் யுகம் மீண்டும் விரைவில் தோன்றப் போகிறது, பொருளாதார நெருக்கடியை கையாள்வதில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் பாரதூரமான சவாலை எதிர்நோக்கப் போகிறது, மூன்று மாதங்களாவது திஸநாயக்கவின் அரசாங்கம் தாக்குப் பிடிக்கும் என்பது சந்தேகமே, இஸ்ரேலியர்களை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்துவதற்கு தீட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் திட்டங்கள் காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகையில் ஏற்படப்போகும் வீழ்ச்சி வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியத்தை கடுமையாகப் பாதிக்கப்போகிறது என்றெல்லாம் பலவாறாக பூச்சாண்டி காட்டும் வேலைகளில் எதிரணிக் கட்சிகள் இறங்கியிருக்கின்றன.

இன்னமும் சொற்ப நாட்களில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தன்னால் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் ஊழலும் முறைகேடுகளும் இல்லாத நிர்வாகத்தை நடத்துவதற்கும் பலம் பொருந்திய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் தேசிய மக்கள் சக்திக்கு பாராளுமன்றத் தேர்தலில் அமோக ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதி திஸநாயக்க வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுத்து வருகிறார்.

ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் மக்களிடம் எதைக் கூறி வாக்குக் கேட்பது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் எதிரணித் தலைவர்களும் அவர்களைச் சார்ந்த அரசியல்வாதிகளும் திஸநாயக்கவின் அரசாங்கத்தின் மீது பிழை கண்டு பிடிப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

தென்னிலங்கை நிலவரம் இவ்வாறு இருக்கையில், வடக்கு- கிழக்கில் தமிழ் அரசியல் கட்சிகளும் ஜனாதிபதியையும் தேசிய மக்கள் சக்தியையும் படுமோசமான இனவாத சக்திகளாக தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கட்சிகளின் பல தலைவர்கள் திஸநாயக்கவைச் சந்தித்து படங்களை எடுத்து அவற்றை ஊடகங்களில் வெளியிடுவதில் எந்த அசௌகரியத்தையும் அடையவில்லை.

தமிழ்க் கட்சிகளையும் விட தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு, கிழக்கில் கூடுதல் ஆசனங்கள் கிடைத்து விடுமோ என்று தமிழ் அரசியல்வாதிகள் பயப்படுகிறார்கள். தங்களது இதுகாலவரையான அரசியலில் தமிழ் மக்கள் கடுமையான வெறுப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் நன்றாகவே விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய ஜனாதிபதி தனது நிலையை வலுப்படுத்தி அதிகாரத்தில் ஒழுங்காக அமருவதற்கு முன்னதாகவே அவருக்கு எதிராகத் தீவிரப்படுத்தப்படும் பிரசாரங்கள் சாமானியன் ஒருவன் ஆட்சியதிகாரத்துக்கு வந்திருப்பதை பழைய அரசியல் அதிகார வர்க்கத்தால் ஜீரணிக்க முடியவில்லை என்பதை பிரகாசமாக வெளிக்காட்டுகிறது. ஆட்சிமுறை அனுபவம் இல்லாதவர்கள் என்று திஸநாயக்கவையும் தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகளையும் இன்று காணும் விக்கிரமசிங்கவும் ஏனையவர்களும் பிரதேச சபை உறுப்பினராகக் கூட இருக்காத கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வந்தபோது ஆட்சிமுறை அனுபவத்தைப் பற்றி எதையும் பேசவில்லையே. அதுதான் வர்க்க நலன்களின் சங்கமம் எனப்படுவது. பாராளுமன்றத் தேர்தலுக்கு பிறகு தேசிய மக்கள் சக்தி உறுதியான ஓர் அரசாங்கத்தை அமைக்க (7ம் பக்கம் பார்க்க)

# தமிழ் தலைவர்கள் அநுரவுடன் புகைப்படம் எடுப்பதால் அமைச்சர்களாகி விட முடியாது! முல்லைத்தீவில் வைத்து டக்ளஸிற்கு நெத்தியடி கொடுத்த பிமல் ரத்நாயக்கா

தமிழ் தலைவர்கள் அநுரவுடன் புகைப்படம் எடுப்பதால் அமைச்சர்கள் ஆகிவிட முடியாது. தேசிய மக்கள் சக்தியிலே போட்டியிட்டு வெல்பவர்களே அமைச்சர்களாக முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் பிரச்சார கூட்டமானது தேசிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர்




சிதம்பரநாதன் தலைமையில் 26 ஒக் 2024 சனிக்கிழமை இடம்பெற்றது. இதன் போது கலந்து கொண்ட தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கருத்து தெரிவிக்கையில்

அனுரகுமார திஸாநாயக்க ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவர். ரணிலோ, சஜித்தோ, நாமலோ கிராமத்தில் படித்து வளர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் வரிசையில் நின்று அரச வைத்தியசாலையில் மருந்து எடுத்திருப்பார்களா? இல்லை. ஏதாவது ஒரு விடயத்திற்கு வரிசையில் இருந்திருப்பார்களா?

அவர்களுக்கு சாதாரண மக்களுடைய பிரச்சினை தெரியாது. ஆகவே எமது வர்க்கத்தை சேர்ந்தவர் தற்போது ஜனாதிபதியாகி இருக்கின்றார். இதிலிருக்கும் கணிசமானவர்கள் யுத்தத்தில் பாதிப்படைந்தவர்களாக இருக்கலாம். பெரும்பாலனவர்களது வீடுகள் சேதமடைந்திருக்கலாம். அதே போல் அனுரகுமார திஸாநாயக்கவின் வீடு 1979 ஆம் ஆண்டு இராணுவத்தால் தாக்கப்பட்டிருந்தது.

யுத்தத்தினால் உற்றார், உறவினர்கள் உயிரிழப்புக்களை சந்தித்திருக்கலாம் அதேபோல் அனுர அவர்களது ஒரேயொரு அண்ணா டயர் கொளுத்தி கொலை செய்யப்பட்டார். யுத்தம் மிகவும் வித்தியாசமான யுத்தம். யுத்தத்தின் போது சாதாரண சிங்கள, தமிழ் மக்கள், இளைஞர்கள் தான் கொல்லப்பட்டார்கள். சிறப்பம்சம் என்னவென்றால் சாதாரண சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புரிந்த ஒருவரே ஜனாதிபதி ஆகியிருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி வட மாகாணத்தில் மக்கள் மத்தியில் பதிந்து கொண்டு வருகின்றபடியால் பல கட்சிகள் அவதூறுகளை பரப்பிக் கொண்டு வருகின்றார்கள். சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா, சிறீதரன் போன்றவர்கள் அனுர அவர்களை சந்தித்து கொண்டு வருகிறார்கள்.

அவர்கள் எவ்வளவு வங்குரோத்து அடைந்திருக்கிறார்கள் என்பதனை உணர முடியும். அனுரவோடு படம் எடுத்த 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருப்பார்கள். அமைச்சரவை கொடுப்பதாயின் படம் எடுத்த அனைவருக்குமே கொடுக்க வேண்டும். டீல் அரசியலில் நாம் ஈடுபட மாட்டோம். அடுத்த அரசாங்கத்தில் அடுத்த அமைச்சர்களாக பதவியேற்பதும் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெறும் நேர்மையான



ஊழலற்ற நபர்களே என்பதை உறுதியாக கூறுகின்றோம். எதிர்வரும் நவம்பர் மாதம் 04 ஆம் திகதி பிரதமர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கூட்டம் ஒன்றிற்கு வருகின்றார். அதேபோல் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் வருகின்றார். அக் கூட்டங்களிலும் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும். அடுத்த 14ஆம் திகதி தேர்தலுக்கு பின்னர் மிக வேகமாக நாட்டை கட்டியெழுப்பும் பயணத்துடன் நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பயணிப்போம் என மேலும் தெரிவித்தார்.

## அநுரவுடனான சந்திப்பு பற்றி டக்ளஸ்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவிற்கும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையிலான சந்திப்பு இடம் பெற்றது. இச்சந்திப்பின் போது, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பணியாற்றிய கடந்த காலப் பகுதியில், அடையாளம் கண்டு சிபார்சு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களை தொடர்வது, மற்றும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டிருத்த திட்டங்களை ஆரம்பிப்பது வேண்டியவற்றுள், முன்னுரிமைப்படுத்தப்பட்ட 38 விடயங்கள் தொடர்பாக டக்ளஸ் தேவானந்தா அவர்களினால் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் உள்ளிட்ட குறித்த விடயங்கள், ஜனாதிபதியினால் சாதகமாக பரிசீலிக்கப்பட்ட நிலையில், சந்திப்பு சுமூகமாக நிறைவடைந்தது.

இதன் போது, நடைபெவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.டி.பி. கணிசமான ஆசனங்களை பெற்று நாடாளுமன்றம் வரவேண்டும் என்ற வாழ்த்துக்களை ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்று தாளில் எழுதி பொக்கற்றக்குள் வைத்துக் கொண்டு திரியும் டக்ளஸ் தேவானந்தா இது வரை 8 ஜனாதிபதிகளுக்குப் பாத பூஜை செய்து சேவகம் செய்துள்ளார். அப்போதெல்லாம் இந்தத் தத்துவத்தைப் பற்றி வாயே திறந்தது கிடையாது.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# வடக்கு கிழக்கில் அநுர அலையும் சுமந்திரனும்!



இன்று நடைமுறையில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவராக' செயல்பட்டுக் கொண்டிருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் 'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அநுர அலை ஒன்று வீசுவதாகவும் அது ஆபத்தானது என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார். தங்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் அதிகாரத்தை தமிழ் மக்கள் எங்களுக்கே தர வேண்டும். அநுர அலையை அடியோடு அகற்றி விட வேண்டும்.

தமிழ் அரசு கட்சியை ஓர் அணியாக — பேரம் பேசும் சக்தியாக பாராளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலமாகவே தமிழ் மக்கள் தங்களது இலக்குகளை அடைய முடியும். அதற்கான ஆணையை எமது மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது', என்றும் அந்த நேர்காணலில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு முதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற பிரவேசம் செய்த சுமந்திரன் பிறகு இரு பாராளுமன்ற தேர்தல்களில் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு இதுவரையில் பதினான்கு வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்திருக்கிறார்.

இந்தத் தடவை பாராளுமன்றத் தேர்தலில் கூட்டமைப்பின் வேட்பாளராக இல்லாமல் தமிழ் அரசு கட்சியின் வேட்பாளராகவே அவர் களமிறங்கியிருக்கிறார். இன்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் பலவாறாகப் பிரிந்து தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும், அவற்றிடையே சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டும் என்பதில் ஓர் ஒற்றுமை இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். தாங்கள் வெற்றி பெறா விட்டாலும் பரவாயில்லை, சுமந்திரன் தோல்வியடைய வேண்டும் என்ற ஓர்மத்துடனும் பலர் இருக்கிறார்கள். உண்மையில், இந்தத் தேர்தலில் அவர் முன்னென்றும் இல்லாத வகையிலான சவாலை எதிர் நோக்குகிறார் என்பதில் சந்தேகமில்லை.

வெவ்வேறாகப் பிரிந்து தேர்தல் களத்தில் நின்றாலும் மனதளவில் தனக்கு எதிராக ஒற்றுமைப்பட்டு நிற்கும் மற்றைய தமிழ்க் கட்சிகளிடமிருந்து வரக்கூடிய சவாலைப் பற்றி பேசாமல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே தங்களுக்கு பெரிய சவாலாக இருப்பது போன்று சுமந்திரன் நேர்காணலில் கருத்து தெரிவித்திருப்பது கவனிக்கத் தக்கது.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பிறகு வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ந்து வருகிறது என்பது உண்மையே.

அதை சுமந்திரன் கூறியிருப்பதைப் போன்று ஓர் அநுர அலை என்று வர்ணிப்பது எந்தளவுக்கு பொருத்தமானது என்பது ஒரு முக்கியமான கேள்வி. தங்களிடம் வாக்குக் கேட்டு வரும் தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களிடம் தமிழ் மக்கள் 'நாங்கள் இந்த முறை திசைகாட்டிக்குத் தான் வாக்களிக்கப் போகிறோம்' என்று கூறுவதாக அறிய முடிகிறது. ஜனாதிபதி அநுரவுக்கும் சுமந்திரனுக்கும் இடையில் நெருக்கமான உறவு இருக்கிறது என்று பரவலாகப் பேசப்படுகிறது.

தெற்கில் மக்கள் காண விரும்பும் மாற்றத்துக்கு ஆதரவாக வடக்கு மக்கள் வாக்களிப்பதே விரும்பத்தக்கது என்ற தொனியில் ஜனாதிபதி தேர்தலின் போது அநுர பேசியதை தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் இனவாதத்தை அவர் தூண்டுவதாக ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டிய போது அதை மறுதலித்து, 'அநுர இனவாத நோக்கத்துடன் அவ்வாறு கூறவில்லை', என்று அவருக்காக ஓடிச்சென்று முதலில் குரல் கொடுத்தவர் சுமந்திரன். இப்போது அவர் அதே அநுர அலையைத் தடுத்தே ஆக வேண்டும் என்று சூளுரைக்கிறார்.

தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் தமிழ் அரசியல் கட்சி களிடம் அதுவும் குறிப்பாக தனது தமிழ் அரசு கட்சியிடம் இருக்க வேண்டும் என்ற அவரின் அக்கறையே அதற்குக் காரணம் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், தமிழ்க் கட்சிகள் பல்வேறு கூறுகளாகப் பிரிந்து தங்களுக்குள் முட்டி மோதி தமிழ்த் தேசியவாத அரசியலை கேலிக் கூத்தாக்கிக் கொண்டிருப்பதனால் தங்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் படுமோசமாக சிதறுப்படப் போகிறது என்று அஞ்சும் தமிழ் மக்கள், தமிழ் கட்சிகள் மீது கடுமையாக வெறுப்படைந்திருக்கிறார்கள். தங்கள் மத்தியில் மாற்று அரசியல் சக்தி ஒன்று இல்லை என்பதாலேயே அநுர பக்கம் தமிழ் மக்கள் திரும்பிப் பார்க்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்பதை சுமந்திரன் மாத்திரமல்ல, மற்றைய தமிழ் கட்சிகளின் தலைவர்களும் சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

# அமெரிக்கத் தூதுவர் கஜேந்திரகுமாரிடம் ஆவலுடன் கேட்ட கேள்வி

வடக்குக்கு சென்றவாரம் விஜயம் செய்த அமெரிக்க தூதுவர் ஜீலிசங் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தையும் கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனையும் யாழ்ப்பாணத்தில் தனியார் ஹோட்டல் ஒன்றில் சந்தித்துப் பேசியபோது தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் வெட்கித் தலைகுனிய வேண்டிய கேள்விகளை கேட்டாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக செயல்பட்ட தமிழ்க் கட்சிகள் ஏன் பிரிந்து நிற்கின்றன? இந்தக் கட்சிகளால் ஒற்றுமையாக செயல்பட முடியாதா? அதற்கான சாத்தியங்கள் இருக்கின்றனவா? இவையே அமெரிக்கத் தூதுவர் எழுப்பிய கேள்விகள்.

அவற்றுக்குப் பதிலளித்த பொன்னம்பலம் தங்களைப் பொறுத்தவரை, ஒற்றையாட்சி மற்றும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் போன்ற விடயங்கள் தொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே கூட்டமைப்பில் இருந்து வெளியேறவேண்டி வந்தது என்றும் அந்த நிலைப்பாட்டில் தாங்கள் தொடர்ந்தும் இருந்து வருகின்றனர் எனவும் கூறியிருக்கிறார்.

மற்றைய தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதற்கான காரணம் தங்களுக்கு விளங்கவில்லை என்றும் குறிப்பிட்ட அவர், கொள்கையளவில் அந்தத் தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் வேறுபாடுகள் இல்லை என்பதால் அவர்களுக்கு இருக்கக் கூடிய பிரச்னைகளை அவர்களிடமே கேட்டறிய வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவரிடம் கூறி வைத்தாரென அந்த செய்திகள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது.

பொன்னம்பலம் அளித்த பதில் அவரின் முன்னணி மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியம் ஒருபோதும் தோன்றப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்தது.

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜா முதற் தடவையாக தமிழ்க் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்த போது தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வு தொடர்பில் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்குமாறு கேட்டுக் கொண்ட வேளையிலும் பொன்னம்பலம் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் அத்தகைய ஒன்றுபட்ட நிலைப்பாட்டுக்கு வருவதில் உள்ள சிக்கல்களை நேரடியாகவே கூறியிருந்தார்.

அவருடைய நிலைப்பாடுகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இருப்பது வேறு விடயம். ஆனால், அவர் மற்றைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து செயல்படுவதற்கு சாத்தியமில்லை என்பதிலும் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தொடர்பான நிலைப்பாட்டில் சமரசத்துக்கு இடமில்லை என்பதிலும் உறுதியாக இருக்கிறார்.

அத்தகைய ஒரு பிடிவாதமான நிலைப்பாட்டின் மூலமாக தாங்கள் இதுவரையில் சாதித்தது என்ன என்பதை தமிழ் மக்களுக்கு கூறினால் நல்லது. கொள்கைகளைப் பொறுத்த வரை எந்த வேறுபாடும் இல்லாத மற்றைய தமிழ் கட்சிகள் பிரிந்து நிற்பதற்கான காரணங்களை அந்தக் கட்சிகளின் தலைவர்களிடமே கேட்கவேண்டும் என்று பொன்னம்பலம் கூறியதைக் கேட்ட ஜீலிசங் அந்த தலைவர்களைச் சந்தித்தாரென இந்த ஆசிரிய தலையங்கத்தை எழுதிய தருணம் வரை தகவல் இல்லை.

அவர் இலங்கையில் தனது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டு விரைவில் அமெரிக்கா திரும்பவிருப்பதால் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்பதற்கான உண்மையான காரணங்களை அறியாமலேயே போய் விடவும் கூடும்.

இறுதியாக, பாராளுமன்றத் தேர்தலில் அரசியல் தீர்வு குறித்து தமிழ் மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டுக்குப் புறம்பாக அமெரிக்கா ஒருபோதும் செயல்படாது என்றும் பொன்னம் பலத்திடம் ஜீலிசங் கூறியிருக்கிறார். உலகின் மிகப்பெரிய வல்லரசான அமெரிக்காவே புறம்பாகச் செயல்பட முடியாததாக அப்படி வடக்கு, கிழக்கு தமிழ் வாக்காளர்கள் வெளிப்படுத்தக்கூடிய நிலைப்பாட்டின் இலட்சணத்தை பார்ப்பதற்கு ஓர் சொற்ப நாட்கள் தானே அமைதியாகப் பொறுத்திருப்போம்.

# அநுரவுக்கும் எனக்கும் இடையில் என்ன வித்தியாசம்? - ரணில் கேள்வி
## 75 ஆண்டுகள் நாட்டைக் கொள்ளையடித்த கும்பல்களின் அங்கலாய்ப்பு

தன்னைப் போலவே தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் பெரும்பான்மை இல்லாத ஜனாதிபதி என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயக முன்னணியினால் 27 ஒக் 2024 ஞாயிறு காலை நீர்கொழும்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்களின் பட்டியலைக் பார்த்தால் அவரது அரசாங்கம் மூன்று மாதங்கள் அல்ல மூன்று வாரங்கள் செல்ல முடியுமா? என்று எனக்குத் தெரியவில்லை. நாட்டிற்கு அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை. அனுபவமுள்ளவர்களை வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அவர்களில் பெரும்பான்மையானவர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புங்கள் நாட்டை முன்கொண்டு செல்வதற்கு. அனுபவம் வாய்ந்த பெரும்பான்மையானவர்கள் இருந்தால் தான் அவருக்கும் மூன்றாண்டுகள் ஏனும் செல்ல முடியும்

தோற்றதால் என்னை வீட்டில் இருக்குமாறு சொல்கின்றனர். நான் தோற்றதை, ஒப்புக்கொள்கிறேன்.

நான் ஜனாதிபதி தேர்தலுக்கு வந்தேன், வாக்கு கேட்டேன். பெரும்பான்மையானவர்கள் எனக்கு வாக்களிக்கவில்லை. அதனால் தோற்றேன். ஆனால் அவருக்கும் பெரும்பான்மை வழங்கப்படவில்லை. 51வீதம் கிடைக்கவில்லை. அவருக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நான் பெரும்பான்மை இல்லாத முன்னாள் ஜனாதிபதி, அவரும் பெரும்பான்மை இல்லாத தற்போதைய ஜனாதிபதி. அவருக்கும் இல்லை, எனக்கும் இல்லை, அவ்வளவு தான் என்றார். ரணில் மக்களால் தெரிவு செய்யப்படவில்லை

# விஜய்யின் வருகையால் எனது வாக்குகள் குறையாது - சீமான்

தாம் யாரோடு கூட்டணி அமைக்கப் போவதில்லை என நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். தேனியில் இடம் பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ள சீமான், விஜய்யின் அரசியல் வருகையால் தனக்கு வரும் வாக்குகள் குறைவடையாது எனவும், விஜய்யின் ரசிகர்களும் தனக்கே வாக்களிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எம்.ஜி.ஆர். கமல், விஜய் உள்ளிட்டோர் அரசியல் கட்சி தொடங்கும் போது ரசிகர்களை சம்பாதித்த பின்னரே அரசியலுக்கு வந்தனர் எனவும், தான் மக்களை சம்பாதித்த பின்னரே அரசியலுக்கு வந்ததாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் ஒரு நடிகரைப் பார்ப்பதற்காக அதிகளவான கூட்டம் வரும் எனவும், ஆனால் கூட்டத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் அந்த நடிகருக்கே வாக்களிப்பார்களா என்பது சந்தேகம்தான் எனவும் சீமான் தெரிவித்துள்ளார். மேலும் கூட்டணியில் இடம் பெறுபவர்களுக்கு அதிகாரத்தில் பங்கு வழங்கப்படும் எனத் தெரிவித்திருப்பது விஜய்யின் பெருந்தன்மை எனவும், அதனை ஏற்று அவருடன் கூட்டணியில் இணைவது அவரவர் விருப்பம் எனவும் சீமான் தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கத் தொடர்ச்சி) அனுமதித்து திஸநாயக்கவின் தலைமையில் அது நாட்டை நிர்வகிக்க ஒரு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்குவதே உண்மையில் ஜனநாயக பண்பும் அரசியல் நாகரிகமுமாகும்.

# மாவீரர் நாள் அரசியல்வாதிகளுக்கு தீனி ஆகி விட்டது!

மாவீரர் நாள் தற்போது வியாபாரம் ஆகி அரசியல்வாதிகளுக்கு தீனி ஆகிவிட்டது. அரசியல்வாதிகள் தமது அரசியலைப் பார்க்க வேண்டுமே தவிர மாவீரர்களின் தியாகங்களை வைத்து அரசியல் செய்ய முற்படக்கூடாது. அதனை திறமையாக மாவீரர்களின் பெற்றோர்கள் செய்வார்கள் என முன்னாள் போராளி குலசிங்கம் நவகுமார் (பாலன்) தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் கடந்த வாரம் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்தார்.




முன்னாள் போராளி கருத்து தெரிவிக்கையில், 2009 யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இதுவரை நான் எனது வீட்டிலேயே மாவீரர் நாளை நான் அனுஷ்டித்துள்ளேன். இதனை யாரும் தடுக்க முடியாது. மாவீரர் நாள் தற்போது வியாபாரம் ஆகி விட்டது. அரசியல்வாதிகளுக்கு தீனி ஆகிவிட்டது.

எமக்கு முன்னதாக ஒரு அரசியல் முன்னெடுக்கப்பட்டது அதில் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காத நிலையில் நாம் வலிந்து ஆயுத போராட்டத்தை மேற்கொண்டு நிழல் அரசாங்கத்தை அமைத்தோம்.

அந்தத் தலைமை போர்க்களத்துக்கு மாவீரர்களை அனுப்பிய பெற்றோர்களை கௌரவித்தது. அது தகுதியானதோர் கௌரவிப்பு. அது மாவீரர்களின் பெற்றோர்களுக்கு ஒரு விமோசனத்தை அளித்ததாக நான் நினைக்கின்றேன்.

இன்று மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிப்பு செய்யும் அரசியல்வாதிகள் எந்த காலகட்டத்திலும் போர்க்களத்தில் நின்றவர்கள் அல்ல. அவர்கள் தங்கள் பிள்ளைகளை போர்க்களத்துக்கு அனுப்பியவர்களும் அல்ல. அவர்கள் குடும்பத்தில் யாரும் காணாமல் ஆக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் நலன்களுக்காக மாவீரர்களின் தியாகங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். முன்னாள் போராளி என்ற வகையில் இதனை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்

நான் மாவீரர்கள் பெற்றோர்களிடம் அன்பாக கூறுவது என்னவென்றால் தற்போது உங்களை தேடி அரசியல்வாதிகள் வருவதாக அறிகின்றேன். இவருக்கு வாக்களியுங்கள், அவருக்கு வாக்களியுங்கள், இவர் வந்தால் தான் மாவீரர் நாளுக்கு விளக்கேற்ற முடியும் என்ற கதைகளை கூறி பாராளுமன்ற உறுப்பினராகுவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். இதற்கு மாவீரர்களின் பெற்றோர் நல்ல தக்க பதிலை வழங்க வேண்டும் மாவீரர்கள் பெற்றோருக்கு மாவீரர் தூயமில்லங்களுக்கு சென்று அஞ்சலிப்பதற்கு முடியும். அதனை யாரும் தடுக்க முடியாது. எந்த வரவு செலவுத் திட்ட நிதியை பயன்படுத்தி நீங்கள் துயிலுமில்லங்களை கட்டப் போகின்றீர்கள். புலம்பெயர் உறவுகள் பணம் தருவார்கள் என்றால் அதற்கான அனுமதியை பெற முடியுமா? பெரும்பாலான துயிலும் இல்லங்கள் உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாட்டிலேயே காணப்படுகிறது. அதற்கு பொறுப்பாக உள்ள பிரதேச சபை செயலாளர்கள் ஒத்துழைப்பார்களா?

சில சமயங்களில் மாவீரர் தூயிலும் இல்லங்களில் அரசியல்வாதிகள் சண்டை பிடிக்கின்றனர். மாவீரர்களின் பெற்றோர்களிடம் நாம் கண்ணியமாக வேண்டுவது உங்கள் பிள்ளைகளின் தியாகங்களையும் உணர்வுகளையும் வித்துப் பிழைக்கின்ற வகையில் செயல்படாதீர்கள்.

நான் 20 வருடங்கள் போர்க்களத்தில் நின்ற போராளி. இதனை சொல்வதற்கு எனக்கு தகுதி இருக்கு நான் நம்புகிறேன். மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவில் அரசியல்வாதிகள் இருப்பதை தவிர்த்து மாவீரர்களின் பெற்றோர்களை அதில் போடவேண்டும்.

அரசியல்வாதிகள் தமது சமகால அரசியலைப் பார்க்க வேண்டும். மாவீரர்களின் தியாகங்களை வைத்து அரசியல் செய்ய முற்படக்கூடாது. அதனை திறமையாக மாவீரர்களின் பெற்றோர்கள் செய்வார்கள் என தான் நம்புகிறேன் என்றார்.

## அறுகம்குடாவில் கண்காணிக்கப்படும் இஸ்ரேலியர்கள்

அறுகம்குடாவில் சுற்றுலா விசாவில் தங்கியிருந்து, வியாபாரம் மற்றும் மத நடைமுறைகள் போன்ற பொழுதுபோக்கிற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இஸ்ரேலிய பிரஜைகள் உட்பட சுற்றுலாப் பயணிகள் பற்றிய முறைப்பாடுகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சகல சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா வீசாவில் வர்த்தகம், மத ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபடல் அல்லது சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம் என்பதை கடந்த கால சம்பவங்கள் காட்டுகின்றன அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத், தெரிவித்தார். தற்போது அறுகம் குடாவில் உள்ள இஸ்ரேலியர்கள் உட்பட அனைத்து வெளிநாட்டு பிரஜைகளும், சுற்றுலா விசாவில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஹேரத் தெளிவுபடுத்தினார். எவ்வாறாயினும், சுற்றுலா விசா விதிமுறைகளிற்கு அப்பால் சுற்றுலாப் பயணிகள் எதேனும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தெரிந்தால் அதனை தெரியப்படுத்துமாறு அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர் என்று அவர் கூறினார். இலங்கையில் விடுமுறைக்கு வருபவர்களுக்குப் பொருத்தமற்றதாகக் கருதப்படும் தொழில், வியாபாரம் பிற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், அதிகாரிகளுக்கு அது குறித்து அறிவிக்குமாறு அப்பகுதியில் உள்ள விடுதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது,




# இலங்கையின் புதிய அரசுக்கு எதிராக சதிவலைகள் பின்னப்படுகின்றனவா?

ஆட்சியதிகாரத்தையும் அதன் வழி ஆடம்பரமான வாழ்கை, சொத்துக் குவிப்பு போன்றவற்றை தொடர்ந்து சுகித்து மகிழும் மேட்டுக்குடி வர்க்கமும் அவர்களுக்கு முண்டு கொடுத்து தமது பைகளை நிரப்பும் நிறுவனங்களும் முதலாளிகளும் அதனை இழப்பதற்கு ஒரு போதும் விரும்புவதில்லை.

அதே போலவே ஒரு நாட்டில் தமது நவகாலனித்துவ சுரண்டல்களுக்கு பாதிப்பு ஏற்படுவதை எந்தவொரு வெளிநாட்டுச் சக்திகளும் விரும்புவதில்லை. இவர்களின் இத்தகைய விருப்பத்திற்கு மாறாக ஒரு நாட்டில் அந்நாட்டு மக்களால் உருவாக்கப்படும் மாற்றங்கள் இவர்களுக்கு ஏமாற்றமாக மாறிவிடுகின்றன. இதனால் இத்தகைய மாற்றங்களைத் தனித்தோ அன்றிக் கூட்டாகவோ முளையிலேயே கிள்ளி விடுவதற்கு இவர்கள் ஒரு போதும் தயங்கியதில்லை என்பதைப் பல நாடுகளின் அரசியல் வரலாறுகள் எடுத்துக் கூறுகின்றன. இத்தகையதொரு வரலாற்றை இலங்கையிலும் எழுதுவதற்கு இச்சக்திகள் தயாராகி விட்டனவோ என்ற ஐயம் சென்ற வாரத்தில் இந் நாட்டில் இடம்பெற்ற சில நிகழ்வுகள் மக்கள் மத்தியில் தோற்றுவித்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் ஆட்சியதிகாரம் மாறி மாறி மேட்டுக்குடியினர் கைகளிலேயே இருந்து வந்துள்ளது. எழுபதுகளின் தொடக்கத்தில் ஸ்ரீமாவோ அம்மையாரின் தலைமையிலான ஆட்சியில் இடதுசாரிகளின் செல்வாக்கும் அதன் வழி தேசிய நோக்கிலான சில மாற்றங்களும் தோற்றம் பெற்ற போதிலும் அவை குறுகிய ஆயுளையே கொண்டிருந்தன.

இந்த மேட்டுக்குடி ஆட்சியாளர்கள் பதவிக்கான அரசியலில் முரண்பட்டுக் கொண்டாலும் தமது வர்க்க நலனைப் பேணிக்கொள்வதில் ஒரு போதும் முரண்பட்டுக் கொண்டதில்லை. ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்காது பாதுகாத்தே வந்துள்ளனர். நாடு மிகமோசமான நிலைக்கு தள்ளப்பட்டு மக்கள் இன்னற்பட்ட வேளையில் கூட இவர்களின் சௌகரியங்களில் எவ்வித தொய்வும் ஏற்படவில்லை. இதற்காக அவர்கள் வெளிநாட்டுச் சக்திகளையும் திருப்திப்படுத்த ஒருபோதும் தயங்கியதுமில்லை.

ஆனால் இவை யாவும் சென்ற ஜனாதிபதித் தேர்தலின் மூலம் தங்களின் கைகளிலிருந்து நழுவி விட்டதை இவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை என்பதற்கப்பால் எங்கே தமது இருப்புகளுக்கும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் இவர்களிடம் தோன்றி விட்டது. இதனால் புதிய அரசாங்கம் நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் மேலும் பலம் பெறுவதைத் தடுப்பதுடன், புதிய ஆட்சியாளர்க்கு இக்கட்டை ஏற்படுத்தும் காரியங்களை முடுக்கிவிடுவதன் மூலம் மீண்டும் தங்கள் நிலையை உறுதிப்படுத்த எத்தனிக்கிறார்களோ என்ற ஐயம் தோன்றுவதற்கு சென்ற வாரத்தில் அரங்கேற்றப்பட்ட மூன்று முக்கிய நிகழ்வுகள் காரணமாகின்றன.

1. ஈஸ்டர் குண்டுவெடிப்பு தொடர்பான ஆணைக்குழு அறிக்கையை வெளிப்படுத்தி உதய கம்மன்பொல ஆட்சியாளர் மீது முன்வைத்த குற்றச்சாட்டுகள்.

2. அரசு ஊழியர்க்கான சம்பள உயர்வு தொடர்பாக ரணில் முன்வைத்த கருத்துகள்.

3. நாட்டின் உல்லாசப் பயணத்துறையைப் பாதிக்கும் வகையிலான முன்னெச்சரிக்கையை வெளிநாடுகள் விடுத்தமை.

உதயன் கம்மன்பொல முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரிப்பதற்கு நீதிபதி அல்விஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட இரண்டாவது



ஆணைக்குழுவின் அறிக்கையை வெளியிட்டு அதில் சுட்டிக்காட்டியபடி தாக்குதல் தொடர்பான தகவல்கள் முன்கூட்டியே கிடைத்தும் நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக தற்போது அனுரவினால் பதவியிலமர்த்தப்பட்ட காவல்துறை அதிபர் ரவி செனவிரத்ன மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் ஹேரத் விசாரணைக்குழுவின் தலைவர் அல்விஸின் பின்புலம், இவ்வாணைக்குழுவை ரணில் நியமித்ததன் நோக்கம், அதிலுள்ள தவறுகள் என்பவற்றை வெளிப்படுத்தி இது உண்மையான குற்றவாளிகளை காப்பாற்றுவதை நோக்கமாகக் கொண்டதால் இவ்வறிக்கையை ஏற்கமுடியாது என்று கூறியதுடன், நீதியான விசாரணை இடம் பெறும் என்றும் கூறியிருந்தார்.



ஹேரத்தின் இக்கருத்தை கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் ஏற்றுக் கொண்டதுடன், இதனை அரசியலாக்க வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் கம்மன்பொலவின் நிலைப்பாடு பற்றியது ஆகும். தனது தேர்தல் வெற்றிக்காக இத்தாக்குதலின் பின்னால் இருந்ததாக பல தரப்பாலும் ஐயப்படுபவரான கோத்தாபயவின் ஆட்சியில் அமைச்சராக இருந்த கம்மன்பொல அக்காலத்தில் இது தொடர்பான விசாரணைக்காகக் குரல் கொடுக்கவில்லை. இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளைச் சரியான திசையில் முன்னெடுத்த ஷானி அபயசேகரவை கோதாபய பதவியிலிருந்து அகற்றிய வேளையிலும் குரல் கொடுக்கவில்லை. அதன்பின் இவ்வாணைக் குழுவின் அறிக்கை ரணிலின் கையில் செப்ரம்பர் மாதம் கிடைத்திருந்த போதும் அதனை வெளியிடும்படி கேட்டிருக்கவில்லை. அவ்வாறாயின் இப்போது இது தொடர்பாக உதய கம்மன்பொல கூச்சலிடுவதன் நோக்கம் யாது?

இதன் மூலம் தனது விசுவாசிகளை பாதுகாப்பதற்கு அப்பால் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் இந்நேரத்தில் புதிய அரசாங்கத்தை நிலைகுலைய வைப்பதற்கான திட்டமிட்ட நடவடிக்கைகளின் ஒரு வெளிப்பாடாக இருக்குமோ என்ற ஐயம் எழுவது இயல்பானதே.

அடுத்தது அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பான பிரச்சினை கிளறப்படுதல். தான் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் 2025 ஜனவரி மாதத்திலிருந்து அரச ஊழியர்களுக்கு 25வீதம் தொடக்கம் 50வீதம் வரையிலான சம்பள உயர்ச்சி வழங்கப்படும் என தேர்தலுக்கு முன் ரணில் அறிவித்திருந்ததுடன், அது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றும் எடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இது முழுக்க முழுக்க தேர்தல் வெற்றிக்கான ஓர் அறிவிப்பு என்பதுடன் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானமும் எழுந்தமானதொன்றாகவே கருதப்பட்டது.



குறிப்பாக இதற்கான முறையான ஒப்புதல் திறைசேரியிடமிருந்து பெறப்படாமலே அமைச்சரவையால் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டிருந்தது. நிலைமை இவ்வாறிருக்க ரணில் சில ஊழியர் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கூட்டிவைத்து, தனது அமைச்சரவையின் குறிப்பிட்ட தீர்மானம் அரசியலமைப்பின் 43ஆவது உறுப்புரையின் படி சட்டவலு உள்ளதென்று கூறியதுடன், இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்து என்று கேள்வியை எழுப்பியது மட்டுமன்றி அரச ஊழியர்கள் தமது உரிமைக்காகப் போராட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

ரணிலின் எழுந்தமானமான அமைச்சரவைத் தீர்மானமும் வர்த்தமானி வெளியீடும் எத்தகைய சட்ட வலுவைக் கொண்டது என்பதை தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்ச்சியில் நாட்டு மக்கள் நன்றாகவே அறிந்ததுதான். தனது அடுத்தமாத அரச செலவுகளுக்கே அல்லற்பட்டுக் கொண்டிருந்த ரணிலின் அரசாங்கம், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு — செலவுத்திட்டம் எதுவும் சமர்ப்பிக்கப்படாத ஒரு நிலைமையில் 2025 இலிருந்து சம்பள உயர்வை வழங்குவதற்கு 2024 செப்ரம்பரிலேயே நிதியை ஒதுக்கியிருந்தது என்று கூறுவது எவ்வளவு நம்பகத்தன்மை உடையது?

நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தாமதமடையுமாதலால் தேர்தலின் பின் முதலில் இடைக்கால நிதிமூல அறிக்கையை சமர்ப்பிக்கப் போவதாகக் கூறியுள்ள புதிய அரசாங்கம் வரவு — செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு தொடர்பாக கவனஞ் செலுத்தப்படும் எனவும் வாக்குறுதியளித்துள்ள ஒரு சூழ்நிலையில் இது தொடர்பாக ரணில் இப்போது பிரச்சினையைத் தோற்றுவிப்பதன் நோக்கம் என்ன?

எதிரக்கட்சிகள் என்ற வகையில் இது தொடர்பாக கேள்வி கேட்பதாயினும் கூட ஜனவரி மாதத்தில் அல்லது பதிய வரவு செலவுத் திட்டத்தின் பின்னல்லவா அத்தகைய கேள்வி எழுப்பப்பட வேண்டும்? அவ்வாறில்லாது, பாராளுமன்றத் தேர்தலை எதிர்நோக்கும் இந்நேரத்தில் தவறான தகவல்களை வழங்கி ரணில் அரச ஊழியரை திசைதிருப்ப முனைவது புதிய அரசாங்கத்தை நிலைகுலைய வைப்பதற்கான இன்னொரு முயற்சியாகும் என எண்ணுவது இயல்பானதே.

அடுத்தது அறுகம்குடாவில் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை. இது அனுரவின் ஆட்சிக்குக் கால் தடம் போடுவதற்கான மேலே

**கட்டுரையாளர்:-**
**மூத்த அரசியலாளர்**
**- அருந்தவபாலன் -**



சுட்டிக்காட்டிய முன்னெடுப்புகளை விட மிகப் பாரதூரமான ஒன்று. இது அனுரவுக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக உள்ளது. ஏலவே சுட்டிக் காட்டிய இரு விடயங்களும் நேரடியாக அரசியல் சார்ந்த நெருக்கடிகளை உண்டாக்கும் அதேவேளை இது நாட்டின் பொருளாதாரத்தை ஆட்டங் காணச் செய்வதன் மூலம் அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்து புதிய அரசாங்கத்தை நிலை குலையச் செய்வதற்கான ஒரு முயற்சியாக இருக்குமோ என ஐயுற வேண்டியுள்ளது. ஏனெனில் ஏலவே முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷவின் வெளியேற்றம் இவ்வாறான பட்டறிவை மக்களுக்குத் தந்துள்ளது.

இலங்கைக்கு வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுத் தரும் முக்கிய துறையாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அமைந்திருக்கிறது. இத்துறை வெளிநாட்டு நாணயத்தை மட்டுமல்ல மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் நேரடியான, மறைமுகமான வேலைவாய்ப்புகள் போன்றவற்றிலும் கணிசமான பங்களிப்பைத் தருகின்ற ஒன்றாகும். இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறையினைக் கணிசமான அளவு ஈடு செய்யும் இரு மூலங்களில் இது முக்கியமான ஒன்று.

மற்றது வெளிநாட்டிலுள்ள இலங்கையரின் பண அனுப்புதல்கள். 2024 ஆம் ஆண்டில் 2.3 மில்லியன் உல்லாசப் பயணிகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், அதன்மூலம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் ஈட்டமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏலவே செப்ரம்பர் மாதமளவில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு எய்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான ஒரு நிலையில் குறிப்பிட்ட தாக்குதல் எச்சரிக்கையும் தங்கள் தங்கள் குடிமக்களுக்கான உலக நாடுகளின் கோரிக்கைகளும் எதிர்மறையான விளைவுகளை நிச்சயம் ஏற்படுத்தக்கூடும். இது தொடர்பாக இதுவரை வெளியான தகவல்களின்படி உண்மை நிலவரங்கள் உறுதிப்படுத்தப்பட முடியாத ஒரு நிலையே காணப்படுகிறது.

உண்மையாகவே தாக்குதலுக்கான திட்டம் இருந்ததா அல்லது அவ்வாறான குழப்ப நிலையொன்றை உருவாக்கும் எண்ணம் மட்டுமா? என்பது தெரியவரவில்லை. திட்டம் ஏதும் இருந்திருக்குமானால் அதில் உள்நாட்டுச் சக்திகள் தொடர்புபட்டதா அல்லது வெளிநாட்டு சக்திகளுக்கும் தொடர்புள்ளதா என்பது இனிமேல் தான் தெரியவரும். உள்நாட்டு அரசியல் (15ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! நவம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

26 ஒக்டோபர் 2024 - 01 நவம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 14வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இரத்தினம் தம்பிமுத்து

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 14வது ஆண்டு நினைவுநாள் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 13வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு வே.இ.இராசையா அவர்கள்

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களின் 13வது ஆண்டு நினைவு நாள் 27 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு இராசையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 28வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கந்தையா பேரின்பநாதன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கந்தையா பேரின்பநாதன் (லெப் கேணல் நாதன்) அவர்களது 28வது ஆண்டு நினைவு நாள் 26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் ஆகியோருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு சிவபாலன் சின்னையா

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் எட்மண்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சிவபாலன் சின்னையா அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 07 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சிவபாலன் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி




### திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா

மலேசியா கோலாலம்பூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் யாழ்.கந்தர்மடம், இந்தியா கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 07 நவம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி கிருஷ்ணகுமாரி நடராஜா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவுகள்






### திரு சுப்பிரமணியம் கந்தையா
### திருமதி பார்வதி கந்தையா

அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களது சிரார்த்த தினம் 29 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பிரமணியம் கந்தையா திருமதி பார்வதி கந்தையா இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த லெப்.கேணல் நாதன் என்று அழைக்கப்படும் திரு கந்தையா பேரின்பநாதன் அவர்களது 28வது அண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது சகோதரி திருமதி யோகாம்பிகை இலங்கேஸ்வரன் அவர்கள் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கொக்குவிலைப பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு துரைராஜா தர்மபாலன் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




26 ஒக்டோபர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோபர் பீற்றர் ஆன் தம்பதிகளின் செல்வப்புதல்வன் எரின்டனின் 14வது பிறந்த நன்நாளாகும். அன்றைய இனிய நன்நாளில் செல்வன் எரின்டன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



27 ஒக்டோபர் 2024 ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சமூகத் தொண்டர் திரு வே.இ.இராசையா அவர்களது 13வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



29 ஒக்டோபர் 2024 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 7ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பிரமணியம் கந்தையா அவர்களதும் திருமதி பார்வதி கந்தையா தம்பதிகளதும் சிரார்த்த தினமாகும். அன்றைய தினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ்.திருநெல்வேலியை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு இரத்தினம் தம்பிமுத்து அவர்களது 14வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் ஈஸ்வத் சங்கரின் ஒன்பதாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



23 ஒக்டோபர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு கோணேஸ்வரன் இராசையா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு கோணேஸ்வரன் அவர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



25 ஒக்டோபர் 2024 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சசிதரன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மயூரன் சசிதரனின் 32வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் மயூரன் தனது பெற்றோர்கள் சகோதரம் மற்றும் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## 9வது பிறந்த நன்நாள் வாழ்த்து

கனடாவில் வசிக்கும் திரு திருமதி சங்கர் ஜெலிசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் டெனன் ஈஸ்வத் சங்கரின் ஒன்பதாவது பிறந்த நன்நாள் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை யாகும்.

அன்றையதினம் செல்வன் டெனன் தனது பெற்றோர்கள், உறவுகளுடன் இணைந்து பாரதிஇல்லக் குழந்தை களுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

அகவை ஒன்பது காணும் செல்வன் டெனன் ஈஸ்வத் சங்கர் பல்கலையும் கற்றுப் பார் போற்றும் பைந்தமிழ் மகனாக வாழ வேண்டுமென வாழ்த் தும் அவரது பெற்றோர்கள், உறவு களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர் களும் வாழ்த்துகின்றார்கள்.

வாழ்க வளமுடன்!



செல்வன்
டெனன் ஈஸ்வத் சங்கர்

THE TAMIL MIRROR October 15, 2024

தமிழ் மிரர்
Tamil Mirror
YOUR BUSINESS FOR GROWTH...
MIRROR THAT REFLECTS THE TAMIL COMMUNITY

You're Welcome

# 19 வது ஆண்டு விழா

## 19th year celebrations



Prof. V. Sangara Narayanan Chief Guest
முனைவர் வே. சங்கர நாராயணன்






# விருது விழா

## Awards Gala

3 வது முப்பாட்டன் முருகன் விழா

3rd Muppattan Murugan Vizha



NOVEMBER 2024
03
Sunday
4.30 pm

Chinese Cultural Centre,
5183 Sheppard Ave East. Tel: 416-697-0126





# கனடாவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் வெளியீடு

## கனடாவில் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கும்;




இடம் : ஸ்காா்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபம்.
Scarborough Recreation Centre
3600 Kingston Rd, Scarborough
ON M1M 1R9

காலம்: **3/11 2024** | ஞாயிற்றுக்கிழமை 16.00 மணி முதல் 19.00 வரை

**தலைமையுரை** : பேராசிரியர் இ.பாலசுந்தரம்

**சிறப்புரை** : திரு. எஸ். திருச்செல்வம்

**வாழ்த்துரை** :திருமதி: சிறி ரஞ்சினி
திரு. இளங்குமரன்
திரு. கா. யோ. கிரிதரன்

**சிறப்புரை** :திரு. கமல் நவரட்ணம்

**பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரை:**
திரு. லெனி மரியதாஸ்

**ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூல் அறிமுகவுரை:**
திரு. மீரா பாரதி

**இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூல் அறிமுகவுரை:**
திரு. அகனி சுரேஷ்

**சிறப்புப் பிரதிகள் வழங்குதல்:**

**ஏற்புரை:** திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா
(நூலாசிரியர்)



தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்
THE INTERNATIONAL CENTRE | இன்ரர்நஷனல் சென்ரர்
6900 Airport Road, Mississauga, Ontario L4V 1E8
மாவீரர் துயிலும் இல்லம்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2024 - புதன்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes'
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
றொறன்ரோ
27-11-2024
THE INTERNATIONAL CENTRE
6900 Airport Road
Mississauga
ON L4V 1E8
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2024
புதன்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

# தமிழ்மக்கள் ஏன் பலூன்களின் பின் போகிறார்கள்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



மருத்துவர் அர்ஜுனா ஊசிச் சின்னத்தில் போட்டியிடுகிறார். ஒரு விருந்தகத்தில் அவர் உணவருந்திக் கொண்டிருக்கும் பொழுது மான் கட்சியை சேர்ந்த ஒரு




பெண் வேட்பாளர் அவருக்கு தன்னுடைய துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்கின்றார். அந்த காட்சியை அர்ஜுனா வழமை போல நேரலையில் விடுகிறார். அந்தப் பெண்ணிடம் கேள்வி கேட்கிறார். அந்தப் பெண் ஒரு கட்டத்தில் அவரிடம் இருந்து விலகிச் செல்கிறார். அர்ஜுனா அந்த வேட்பாளர் வழங்கிய துண்டுப் பிரசுரத்தால் தன் வாயைத் துடைக்கிறார். அதையும் நேரலையில் விடுகிறார்.

ஒரு சக வேட்பாளரை அந்த மருத்துவர் எப்படி நடத்தியிருக்கிறார் என்பது அவருடைய அரசியல் நாகரீகத்தைக் கேள்விக்கு உள்ளாக்கக்கூடியது. ஆனால் சில மாதங்களுக்கு முன் அவர் சாவகச்சேரியில் ஒரு கலகக்காரனாக எழுச்சி பெற்றார். தனக்கு கிடைத்த பிரபல்யத்தை அவர் மிகவும் திட்டமிட்டு கட்டமைத்தார். யூ டியூப்பர்களின் காலத்தில் அது அவருக்கு மிகவும் இலகுவாக இருந்தது.

தனக்கு கிடைத்த பிரபல்யத்தை இப்பொழுது அவர் அரசியலில் எதிர்பார்ப்போடு முதலீடு செய்கிறார். அவருடைய தேர்தல் சின்னம் ஊசி. சமூக வலைத் தளங்களால் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட ஒரு பலூன் அவர். அவருடைய ஊசியே அவரைக் குத்தி வெடிக்கச் செய்து விடும் என்பதைத் தான் அந்த விருந்தகத்தில் மான் கட்சியின் பெண் வேட்பாளரை அவர் கையாண்ட விதம் நமக்கு உணர்த்துகின்றதா?

அவருக்கு கிடைத்த பிரபல்யத்துக்குக் காரணம் என்ன? சாமானியர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் சமூக வலைத்தளங்களா? அல்லது, மருத்துவத் துறைக்குள் காணப்படும் விமர்சனத்திற்குரிய அம்சங்களா? அல்லது அந்த விவகாரங்களை அந்த துறை சார்ந்த ஒருவரே வெளியே கொண்டு வந்ததுதான் காரணமா?

இல்லை. இவற்றை விட ஆழமான ஒரு காரணம் உண்டு. தமிழ்மக்கள் தங்களுக்காக, தங்களுக்குரிய நீதிக்காகப் போராட யாராவது வரமாட்டார்களா? தங்களுக்காக தன்னைத் தியாகம் செய்ய யாராவது வரமாட்டார்களா? என்று எதிர் பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பது தான் அதற்குரிய முக்கிய காரணம். அதாவது அதைச் சுருக்கமாகச் சொன்னால், தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று காணப்படுகிறது என்று பொருள்.

அர்ச்சுனாவின் பின்னால் மட்டுமல்ல கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் வெவ்வேறு தரப்புகள், கட்டமைப்புக்கள் போன்றவற்றை நோக்கி அதிகரித்த எதிர் பார்ப்போடு அவற்றின் பின் சென்றிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த தலைமைத்துவம் அல்லது எதிர்பார்த்த தொடர்ச்சியான காட்சி மாற்றங்கள் நடக்கவில்லை.

தமிழ்மக்கள் பேரவை தோன்றிய பொழுது தமிழ்மக்கள் அதிகம் எதிர்பார்ப்போடு அதை நிமிர்ந்து பார்த்தார்கள். இரண்டு எழுக தமிழ்களிலும் கலந்துகொண்ட அனைவருமே தாமாக வந்தவர்கள்தான். யாரும் வாகனம் விட்டு அழைத்து வரவில்லை.

விக்னேஸ்வரன் மாகாண சபையில் சுமந்திரன் அணியினரால் சுற்றி வளைக்கப்பட்ட பொழுது அவருக்கு கிடைத்த ஆதரவு தன்னியல்பானது. யாரும் திட்டமிட்டு ஒழுங்கமைக்காதது. ஆனால் விக்னேஸ்வரன் தனக்கு கிடைத்த ஆதரவையும் அபிமானத்தையும் அங்கீகாரத்தையும் தொடர்ந்து தக்கவைக்க முடியாதவராகத் தன்னை நிரூபித்தார். தமிழ் மக்கள் பேரவையின் இயங்கா நிலைக்கு அவரும் ஒரு காரணம்.

மாகாண சபையின் காலம் முடிந்த பொழுது சமூக செயற்பாட்டாளராகிய திரு செல்வின் என்னிடம் கேட்டார்... "விக்கி இப்பொழுது என்ன முடிவை எடுக்க வேண்டும்? ஒரு கட்சியை தொடங்கி கட்சி அரசியலை முன்னெடுப்பதா? அல்லது தமிழ் மக்கள் பேரவையை ஒரு மக்கள் இயக்கமாக வளர்த்தெடுத்து அதற்கு தலைமை தாங்குவாரா?'' என்று. நான் சொன்னேன் ...''அவர் மக்கள் இயக்கத்துக்கு தலைமை தாங்கத் தேவையான வாழ்க்கை ஒழுக்கத்தையோ அல்லது அரசியல் தரிசனத்தையோ கொண்டவர் அல்ல. அநேகமாக அவர் கட்சியைத் தொடங்கி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வரக்கூடும்'' என்று.

விக்கி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார். ஆனால் அவர் மாகாண சபைக்குள் சுமந்திரன் அணியினால் சுத்திவளைக்கப்பட்டிருந்த கால கட்டத்தில் அவருக்கு இருந்த கவர்ச்சியும் ஜனவசியமும் இப்பொழுது இல்லை.

தமிழ் மக்கள் பேரவை ஓய்வுக்கு வந்து சில ஆண்டுகளில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி இடம் பெற்றது. அங்கேயும் தமிழ் மக்கள் ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள். தாமாகத் திரண்டார்கள். அது ஒரு பெரிய எழுச்சி. தூதரகங்களைத் திரும்பிப் பார்க்க வைத்த எழுச்சி. படைத் தரப்பை முகாம்களுக்குள் முடக்க வைத்த ஒரு எழுச்சி. ஆனால் அது பின்னர் பலூன் ஆகியது. அந்த பேரெழுச்சியின் பெயரால் உருவாக்கப்பட்ட அமைப்பு அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிக்கு போகவில்லை. அந்த அமைப்பின் இணைத் தலைவர்கள் ஆங்காங்கே மக்கள் போராட்டங்களில் காணப்படுகிறார்கள். ஆனாலும் அது ஒரு பேரியக்கமாக வளர்ச்சி பெறவில்லை.

அப்படித் தான் கடந்த மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி 2 லட்சத்து 26 ஆயிரம் மக்கள் திரண்டார்கள். தமிழ்த் தேசியப் பொதுக்கூட்டமைப்பு என்று அழைக்கப்படுகின்ற, கட்சிகளும் மக்கள் அமைப்பும் இணைந்த ஒரு ஹைபிரிட் கட்டமைப்பை நோக்கி தமிழ் மக்கள் அதிகரித்த எதிர்பார்ப்போடு காணப்பட்டார்கள். ஆனால் சில நாட்களில் வந்த நாடாளுமன்றத் தேர்தலில் பொதுக் கட்டமைப்பு போட்டியிடவில்லை. பொதுக் கட்டமைப்பு தொடர்ந்து வரும் எல்லா தேர்தல்களிலும் கட்சிகளையும் மக்கள் அமைப்புகளையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர் பார்த்தார்கள். இப்பொழுதும் எதிர் பார்க்கிறார்கள். திருக்கோணமலையில் சங்கையும் வீட்டையும் இணைத்தது பொதுச் சபையின் மதத் தலைவர்களில் ஒருவராகிய திருமலை ஆயர்தான்.

எனவே தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு முயற்சித்து இருந்திருந்தால் மீண்டும் கட்சிகளை ஒருங்கிணைக்கலாம், அதன் மூலம் வாக்குச் சிதறலைத் தடுத்திருக்கலாம் என்று எதிர்பார்ப்பு சங்குக்கு வாக்களித்த மக்கள் மத்தியில் பரவலாக இருந்தது.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு முன்கையெடுத்திருந்தால் அரங்கில் இப்பொழுது தோன்றியிருக்கும் பெரும்பாலான சுயேச்சைகள் அந்த கட்டமைப்புக்குள் வந்திருக்கும் என்பது உண்மை. கட்சிகளுக்குள் உடைந்து வெளியே வருபவர்கள் பொதுக் கட்டமைப்பை நோக்கி வந்திருப்பார்கள். ஆனால் அது நடக்கவில்லை. பொதுக் கட்டமைப்பு இப்பொழுது நடைமுறையில் இல்லை.பொதுக் கட்டமைப்புக்குள் காணப்பட்ட மக்கள் அமைப்பு நாடாளுமன்றத் தேர்தலைக் கையாள்வதில்லை என்று முடிவெடுத்தது.இதனால் சங்குக்கு வாக்களித்த மக்கள் எதிர்பார்த்தது நடக்கவில்லை.

இப்படியாக தமிழ் மக்கள் காலத்துக்கு காலம் வெவ்வேறு அமைப்புகளின் மீதும் நபர்களின் மீதும் தங்கள் நம்பிக்கைகளை முதலீடு செய்கிறார்கள். எதிர்பார்ப்போடு பார்க்கின்றார்கள். யாராவது வந்து மீட்க மாட்டார்களா? எந்தக் கட்டமைப்பாவது ஒரு காட்சி மாற்றத்தை ஏற்படுத்தாதா? என்று எதிர்பார்ப்போடு அந்த அமைப்பின் பின் அல்லது நபர்களின் பின் செல்கிறார்கள். முடிவில் உற்சாகமெல்லாம் வடிந்து போய்ச் சலித்து அரசியலில் ஆர்வமற்று ஒதுங்கி விடுகிறார்கள்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் அவ்வாறு தமிழ் மக்கள் சலிப்போடு ஒதுங்கி நிற்கும் ஒரு நிலைமை தோன்றக்கூடும் என்ற பயம் பரவலாக உண்டு. சில கிழமைகளுக்கு முன்பு ஜனாதிபதி தேர்தலில், தேசமாகத் திரள்வோம் என்று நின்ற மக்கள்,இப்பொழுது விருப்பு வாக்கு கேட்டுத் தமிழர்களை வாக்காளர்களாகக் கூறுபோடும் கட்சிகளையும் சுயேச்சைகளையும் சலிப்போடும் ஏமாற்றத்தோடும் விரக்தியோடும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விரக்தி சிலசமயம் அனுர அலையின் பின் மக்களை உந்தித் தள்ளிவிடுமா என்ற பயம் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்கள் மத்தியில் உண்டு. இதே நிலைமை திருக்கோணமலையிலோ அம்பாறையிலோ ஏற்பட்டால் என்ன நடக்கும்? புலம் பெயர்ந்து வாழும் திருகோணமலையைச் சேர்ந்த ஒரு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர் சொன்னார், திருகோணமலையில் எவ்வளவு தான் வாக்குகள் சிதறினாலும் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவம் தேவை என்பதற்காக இனமாகச் சிந்தித்து வாக்களிக்கும் ஒரு பாரம்பரியம் அங்குண்டு. அது இனியும் தொடரும் என்று. தொடர்ந்தால் நல்லது.

அம்பாறையிலும் அப்படி நடந்தால் நல்லது. வடக்கில் மீன் கரைந்தாலும் சட்டிக்குள் தான் இருக்கும் என்று நம்புவோமாக.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சக்திகள் தங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அந்த எண்ணங்களுடன் இயங்கும் வெளிநாட்டுச் சக்திகளை இவ்வாறான காரியங்களில் ஈடுபடுத்துவது என்பது தெரிந்த சங்கதி தான்.

ஈஸ்டர் தாக்குதல்களுக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகளைப் பயன்படுத்தியான சந்தேகங்களும் இந்தியாவில் ராஜீவின் கொலைக்கு விடுதலைப் புலிகளை பயன் படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகங்களும் இவ்வாறு சிந்திக்க வைக்கின்றன. காசா மற்றும் லெபனான் ஹெஸ்புல்லா தீவிரவாதிகள் மீதான தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுப்பதன்று பல நாடுகளும் சுற்றுலாத் தலங்களும் இருக்கும் போது அறுகம்குடாவிலுள்ள இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கான முயற்சி என்று வரும் செய்திகளில் எவ்வளவு தூரம் உண்மையுள்ளது என்பதுவும் கேள்விக்குறியே.

அதேவேளை இந்தியாவும் மேற்குலகும் புதிய அரசாங்கத்துக்கு தமது முழுமையான ஆதரவைத் தெரிவித்து வந்தாலும் இன்னும் அவை அனுர மீது முழு நம்பிக்கையைக் கொள்ளாது ஐயத்துடனேயே நோக்கி வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறு அமைந்தாலும் புதிய அரசாங்கத்தை நிலைகுலையச் செய்வதற்கான உள்நாட்டு, வெளிநாட்டுச் சதிகளை அனுர புறமொதுக்கிவிட முடியாது. அவை எந்நேரத்திலும் அவரின் காலை வாருவதற்கு கங்கணம் கட்டிக் கொண்டே இருக்கும் என்பதே இன்றைய இலங்கையின் அரசியல் களநிலைமையாகும்.

நன்றி:- தினக்குரல்

# பல்கலைக்கழக மாணவர்களின் பொறுப்புக் கூறலும் அரசியற் கடப்பாடும்

தமிழரின் வாக்குகள், தமிழ்த் தரப்புகளுக்கே அளிக்கப்பட வேண்டும். மாறாகத் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு அளிக்கக் கூடாது என்று திருவாய் மலர்ந்திருளியிருக்கின்றனர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இப்படியொரு அறிவிப்பை விடக் கூடுமென்றால் நாங்கள் மட்டுமென்ன குறைந்தவர்களா, என்று கிளம்பிய கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (மட்டக்களப்பு) கலைத்துறை மாணவர்கள், இதே தொனியில் இன்னொரு அறிவிப்பை விட்டுள்ளனர்.

இந்த அறிவிப்போடு இரண்டு தரப்பினரும் தங்களுடைய தேசியக் கடமையையும் இனப் பொறுப்பையும் நிறைவேற்றிக் கொண்டனர். இனி இன்னொரு தேர்தலோ அல்லது வேறொரு நிகழ்ச்சியோ வரும் போது ஊடக நிலையத்துக்கு வந்து இன்னொரு அறிக்கையை விட்டு வரலாற்றுச் சாதனையை நிறைவேற்றிக் கொள்வார்கள். வரலாற்றுச் சாதனைக்கு இதை விட வேறு என்ன செய்ய வேண்டும்?

இது இந்த மாணவர்களின் அரசியல் சாதனையென்றால், இந்த ஊடக அறிக்கை ஏதோ வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்ற எண்ணத்தில் நம்பிக்கையில் இதை வலு கவனமாகக் காவிக் கொண்டு வந்து, தங்களுடைய ஊடகங்களிலும் இணையப்பக்கங்களிலும் நிரப்பிக் கொண்டனர் ஊடகவியலாளர்கள்.

இதொன்றும் புதிய சங்கதியே இல்லை. வழமையாகத் தேர்தலின் போது நடக்கின்ற திருவிளையாடல் தான். முன்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று சொல்லப்படுவதுண்டு. இப்பொழுது அப்படிச் சொல்ல முடியாது. கூட்டமைப்புக் காணாமற் போய் விட்டது. பதிலாக தமிழ்த்தேசியம் என்ற பெயரில் பத்துப் பன்னிரண்டு மஞ்சள் சிவப்புக் கட்சிகளும் குழுக்களும் களத்தில் நிற்கின்றன. இப்படிப் பத்துப் பன்னிரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றால் அதில் எதைத் தேர்வு செய்வது? எந்தத் தரப்புக்கு ஆதரவளிப்பது? என்று முடிவெடுக்க முடியாது.

அதனால் தமிழரின் வாக்குகள், தமிழ்த் தரப்புகளுக்கே அளிக்கப்பட வேண்டும். மாறாகத் தென்னிலங்கைத் தரப்புகளுக்கு அளிக்கக் கூடாது என்று மிகச் சாதுரியமாக, ஒரு அறிவிப்பை விடுத்திருக்கின்றனர், இந்த மாணவர் தலைவர்கள்.

இப்படிப் பொத்தாம் பொதுவாக அறிவிப்பைச் செய்தால் யாரோடும் — எந்தத் தரப்போடும் நேரடியாகப் பகைத்துக் கொள்ள வேண்டியதில்லை. அதேவேளை இனப்பற்றோடும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடும் தாம் உள்ளதாகவும் காட்டிக் கொள்ளலாம். அப்பப்பா, எவ்வளவு சாதுரியமான செயலிது? எப்படித் திறமையான இராசதந்திரம்? உண்மையில் இது மிகத் தவறான ஏற்றுக் கொள்ளவே முடியாத செயலாகும்.

ஏனென்றால், கடந்த 15 ஆண்டுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் செயற்பாடற்ற அறிக்கை விடுநர்களாகவே உள்ளனர். (இதை விட வேறு எப்படித்தான் அவர்களால் செயற்பட முடியும்? ஏனென்றால், இந்த மாணவர்களின் வியப்புக்குரிய தலைவர்களாக இருப்போரும் அறிக்கைப் புலிகளாகத் தானே உள்ளனர்! எனவே தலைவர்கள் எப்படியோ அப்படியே மாணவர்களும்' என்கிறார் நண்பர் ஒருவர்.) அப்படி விடப்படுகின்ற அறிக்கைகள் கூட யதார்த்தம், நடைமுறை, சமூக நிலவரம், அரசியற் சூழல் என எதைப்பற்றிய புரிதலுமற்றனவாகவே இருக்கின்றன. நீண்டதொரு விடுதலைப் போராட்டத்தை நடத்தி, அதில் வெற்றியடைய முடியாமற்போன பாதிப்புகளோடும் இழப்புகளோடுமிருக்கும் ஒரு சமூகத்தின்




தலைவிதியைத் தீர்மானிக்கும் அரசியல் நடவடிக்கைகளில் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கு பெரியது. பொறுப்புமிக்கது.

அதன்படி போராடிய மக்களை ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகளில் இணைந்து பணியாற்றியிருக்க வேண்டும். அவர்களுடைய துயரங்களை ஆற்றுப்படுத்தியிருக்க வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான பணிகளில் பங்களிப்புச் செய்திருக்க வேண்டும். அவர்களுடைய பிரதேசங்களை மீள்நிலைப்படுத்தும் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்திருக்க வேண்டும். கல்வி வளர்ச்சிக்குத் தாராளமாக உதவியிருக்க வேண்டும். பொதுவாகச் சமூக, பொருளாதார, பண்பாட்டு மீள்நிலைக்கும் வளர்ச்சிக்கும் ஆதரவளித்திருக்க வேண்டும். ஆக இவற்றுக்காகக் களப் பணிகளை ஆற்றியிருப்பது அவசியமாகும்.

பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருக்கும்போது மட்டுமல்ல, பட்டம் பெற்று வெளியேறிய பிறகும் கூட இதைத் தொடர்ந்திருக்க முடியும். மட்டுமல்ல 'உளவியல் ரீதியாக உங்களோடு நிற்கிறோம்' என ஆதரவு நிலையைக் காண்பித்திருக்கலாம். போரிலே பாதிக்கப்பட்டோரில் மிகக் கூடிய தாக்கத்துக்குள்ளாகியோர் உளப் பாதிப்புக்கு (Trauma) உள்ளானோரே. ஆகவே இவர்களை ஆற்றுப்படுத்தும் பணியில் நிச்சயமாக இந்த மாணவர்கள் ஈடுபட்டிருக்க வேண்டும். தங்களுடைய கல்வித்துறையின் மூலமாக சமூக, பொருளாதார, பண்பாட்டு, மருத்துவ, அரசியல் ஆய்வுகளைச் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தாலே அது பெரியதொரு வரலாற்றுப் பணியாக இருந்திருக்கும். அதில் பெற்ற புள்ளி விவரங்கள், உண்மையான நிலவரங்களை உள்ளடக்கிய தகவல்கள் — தரவுகளின் மூலமாகத் தமிழ்ச் சமூகத்தைப் புதிய தளமொன்றுக்கு நகர்த்தியிருக்க முடியும். கூடவே இவற்றின் மூலம் சர்வதேச ரீதியாக அரசியலிலும் மனித உரிமைகள், மனிதாபிமானப் பணிகளிலும் பெரும் செல்வாக்கையும் பேராதரவையும் பெற்றிருக்க முடியும்.

ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை. அதில் எந்த மாணவர் ஒன்றியத்தினரும் கரிசனை கொள்ளவில்லை. ஆகச் செய்ததெல்லாம் நினைவு கூரல்களில் பங்கெடுத்தலும் தேர்தல்களுக்கு அறிக்கை விடுத்தலும்தான். அதாவது நோகாமல் போராட்டப் பங்களிப்பைச் செய்வதாகக் காண்பித்ததேயாகும்.

பட்டம்பெற்று வெளியேறிய பிறகு, 'மாணவர் ஒன்றியமும் கத்தரிக்காயும்' என்று அந்த லேபிளைத் தூக்கியெறிந்து விட்டு, வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தை ஆரம்பித்து அரசசார்பு அரசியல்வாதிகளின் காலடியில் நின்ற நிற்கின்ற வரலாறே மாணவர்கள் தலைவர்களுடையது. சிலர் இப்பொழுது தாங்களும் வேட்பாளர்களாக அரசியலில் குதித்துள்ளனர். ஆனால், தெற்கிலே, சிங்களத்தரப்பின் நிலைமை வேறு. அவர்கள் அங்கே மாணவப் பருவத்தைப் புரட்சிகர சமூக உருவாக்கத்துக்காகவே பெரும்பாலும் பயன்படுத்துகிறார்கள். மக்கள் போராட்டங்களை நடத்துகிறார்கள். அரசுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் எதிராகப் போராடுகிறார்கள். முக்கியமாக அறிவுபூர்வமாகச் செயற்படுகிறார்கள். இதற்கொரு பெரிய பாரம்பரியமே அவர்களுக்குண்டு. அங்கே மாணவர்களுடைய சிற்றுண்டிச் சாலைக்கோ விடுதிக்கோ சென்றால் தெரியும், அவர்களுடைய உள நிலையையும் போராட்டத் தன்மையையும் சமூக அக்கறையையும். அதனுடைய ஒரு வெளிப்பாடே அரகலய. அதன் தொடர்ச்சியே தற்போது நடந்து கொண்டிருக்கும் மாற்றத்துக்கான அரசியல் (Politics of change or systemchange).

இப்பொழுது மட்டுமல்ல, தெற்கின் (சிங்கள) மாணவர்களுடைய பாரம்பரியம் என்பது எப்போதும் புரட்சிகரமானதாக யதார்த்தத்தை நோக்கியதாகவே இருந்திருக்கிறது. என்பதால் தான் அவர்கள் தொடர்ந்தும் அரசியல் மாற்றங்களை நிகழ்த்தி வந்திருக்கிறார்கள். அல்லது அதற்கு ஆதரவாக இருந்திருக்கிறார்கள். அந்த மாற்றங்கள் முழுமையடையாதிருக்கலாம். ஆனால், ஒரே கட்சியோ, ஒரே தலைமையோ தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருந்ததில்லை. அதற்கு அவர்கள் அனுமதித்ததும் இல்லை.

இங்கே எழுபது, எண்பது ஆண்டுகளாக ஒன்றுக்கும் உதவாத கட்சிகள் தானிருக்கின்றன. அவை சிதைந்தாலும் பழைய குப்பைகள், ஓட்டை ஒடிசல்கள் என்ற நிலையை எட்டினாலும் தமிழர்களுக்கு அவை தூண்டாமணி விளக்குகள் என்பதேயாகும். மாற்றத்தையோ புதிதையோ எளிதில் ஏற்காத, அங்கீகரிக்காத, நம்பத் தயாரில்லாத ஒரு சமூகாகவே இருக்கிறது. மக்கள் அப்படியிருந்தால் பரவாயில்லை. மாணவர்கள், இளைய தலைமுறையினர், எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய அறிவியற் தரப்பினர் அப்படி வாழாதிருக்க முடியுமா?

மாணவர்கள் தான் பெரும்போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவர்களே புதிய வழிகளைக் காணும் திறனுடையோர். என்பதால் அவர்கள் போராட்டக்களத்தில் முன்னணியினராக எப்போதும் இருக்கின்றனர்.(அடுத்த வாரமும் தொடரும்)

சிவமயம்

ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# தமிழர்களின் யதார்த்தமான கோரிக்கைகளை மதிக்க வேண்டும்!

யாராலும் கையாள முடியாத எவருடைய கட்டுப்பாட்டுக்குள்ளும் நிற்காத ஒரு நிலையை எட்டியுள்ளது தமிழ் அரசியல். அரசியலில் தமிழ் அரசியல் சிங்கள அரசியல் முஸ்லிம் அரசியல் எல்லாம் உண்டா என்று அரசியல் அறிஞர்கள் கேட்கலாம். உண்மையான அர்த்தத்தில் அப்படிச் சொல்ல முடியாதுதான். என்றாலும் பிரயோக நிலையில் அப்படிக் குறித்த சமூகங்கள் தங்களுடைய அரசியலை வரையறுத்து வந்திருப்பதால் இலங்கையின் அரசியலில் இத்தகைய அடையாளம் உருவாகி விட்டது.

தமிழ்நாட்டில் திராவிட அரசியல், தலித் அரசியல், இந்தியத் தேசிய அரசியல் அல்லது காங்கிரஸ் அரசியல், காவி அரசியல் எனப்படும் பா.ஜ.க அரசியல் போன்றவற்றின் அடையாளத்தைப் போல.

எப்படியோ நடைமுறை அர்த்தத்தில் இருப்பதன்படி தமிழ் அரசியலானது, தமிழ்த்தேசிய அரசியலாக அடையாளம் காட்டப்படுகிறது அல்லது உணரப்படுகிறது. அந்தத் தமிழ்த்



தேசிய அரசியல் இது வரையிலும் அரச எதிர்ப்பை அல்லது சிங்கள வெறுப்பு வாதத்தை முன்னிறுத்தியே மேற் கொள்ளக் கூடியதாக இருந்தது. இதற்கான வாய்ப்பையும் அடிப்படைக் காரணத்தையும் அளித்தது.

சிங்களத் தேசியவாதமும் அதைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசும். ஆனால், தற்போது இந்த நிலை மாறியுள்ளது. மாறியுள்ளது என்றால், சிங்களத் தேசியவாதமும் அரச ஒடுக்குமுறையையும் மாறி விட்டன என்று அர்த்தமில்லை. அவற்றின் கட்டமைப்பில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை. ஆயினும் உணர்நிலையில் சற்று நெகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த நெகிழ்ச்சியானது மாற்றத்தை நோக்கிக் கொண்டு செல்லுமா இல்லையா என்பதை எதிர்வரும் ஆட்சியும் அதை உள்ளடக்கும் காலமும்தான் நிர்ணயம் செய்யும். அல்லது தற்காலிகமான ஒரு பதுங்கல் தானா என்பதையும் அதுவே தீர்மானிக்கவுள்ளது.

ஆனாலும் தற்போது ஆட்சிப் பீடமேறியுள்ள புதிய ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவை நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து தங்களுடைய தலைவராக உணர்கிறார்கள். சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இப்படி உணரப்படும் ஒரு தலைவரை நாடு இப்பொழுது தான் சந்திக்கிறது.

ஆனால், இதனை மேலும் உறுதிப்படுத்துவதற்கு அல்லது இது உண்மையான ஏற்புத்தானா என்பதை அறிவதற்கு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் வாய்ப்பாகும். அல்லது அனுரகுமார திசநாயக்கவும் NPP யும் அதை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அதிகப்படியான ஆசனங்களை NPPஎடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிங்களப் பகுதி வாக்குகள் மட்டுமல்லாமல், தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களிலும் NPPக்கான ஆதரவு அலை காணப்படுகிறது.

குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் NPPயின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இதைக் கட்டுப்படுத்தக் கூடிய வல்லமையை தமிழ் முஸ்லிம் தரப்புகளிடம் காண முடியவில்லை. இது வழமைக்கு மாறான ஒன்றாகும்.

வழமையாக வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ்ப் பகுதிகளில் தமிழ் அடையாளத்தைப் பிரதிபலிக்கும் தமிழ்த்தேசியவாதக் கட்சிகளும் முஸ்லிம் பிரதேசங்களில் முஸ்லிம் கட்சிகளுமே செல்வாக்கைப் பெறுவதுண்டு. இது ஒரு பாரம்பரியமாகவே தொடர்ந்து வந்துள்ளது. இந்த நம்பிக்கையில் தான் தமிழ், முஸ்லிம் தலைவர்கள் தத்தமது தேசியவாத அரசியலை எந்தச் சிரமமுமில்லாமல் மேற்கொண்டு வந்தனர். இதில் அவர்களுக்குச் சற்றுத் திமிரும் இருந்தது. இதனால் தான் நாம் ஒரு தும்புத்தடியை நிறுத்தினாலும் எமது மக்கள் அதற்கு வாக்களிப்பார்கள் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா. சம்மந்தன் துணிந்து கூறக்கூடியதாக இருந்தது.

சம்மந்தனுக்குப் பின் வந்தோரும் சம்மந்தனை மறுத்துரைத்தோரும் கூட இந்த எண்ணத்திலிருந்தும் வேறுபடவில்லை. ஒவ்வொருவருக்குமிடையில் போட்டியிருந்ததே தவிர, மாற்றங்களோ யதார்த்தத்தை உணரக் கூடிய திறனோ, மக்கள் மீதான கரிசனையோ இருக்கவில்லை. இத்தகைய பலவீனங்களிருந்தாலும் தமிழ் மக்கள் தங்களுடைய அடையாளமாகவும் அரசியலாகவும் தமிழ்த்தேசியவாதச் சக்திகளையே ஆதரித்து வந்தனர். இதில் எந்தச் சக்தியையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றாலும் வேறு வழி இல்லை என்பதால், திரும்பத் திரும்ப இந்தச் சக்திகளையே ஆதரித்தனர்.

விலக்காக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்களக் குடிப் பரம்பலுக்கு ஏற்ப சிங்கள உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தத் தடவை இது மாற்றமடையப் போகிறது. வடக்குக் கிழக்கில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்கள் NPPயின் பிரதிநிதிகளாகவே இருக்கப் போகிறார்கள். முன்னரும் ஆட்சியிலிருந்த தரப்பைப் பிரநிதித்துவம் செய்யும் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதுண்டு. அது மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. அல்லது அதனுடைய எல்லை மட்டுப்பட்டிருந்தது.

இந்தத் தடவை அது சற்று விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குக் காரணம், ஏற்கனவே சுட்டியுள்ளதைப் போல அனுர மற்றும் NPP மீதான நம்பிக்கையாகும். அதாவது மாற்றம் வேண்டும். மாற்றம் நிகழ்த்தப்படும். அதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற மனநிலை மக்களிடத்தில் மேலோங்கியுள்ளது. இரண்டாவது, சிங்களத் தரப்பிலும் அரசிடமும் காணப்படுகின்ற நேரடியான இனவாதமற்ற நெகிழ்ச்சி நிலை.

இது தமிழ், முஸ்லிம் தேசியவாத அரசியற் தரப்பினருக்கு நெருக்கடியைக் கொடுக்கக் கூடிய ஒன்று. சிங்களத் தேசியவாதம் தீவிர நிலையில் இருந்தால்தான் தமிழ்த்தேசியமும் முஸ்லிம் தேசியமும் எழுச்சியடையும். பொதுவாகவே தேசியவாதத்தின் கூர்முனை அப்படித் தான் அமைவதுண்டு. எதிர்த் தேசியமே மறு தேசியத்தை கூராக்குவது. இங்கே சிங்களத் தேசியவாதம் தணிவு நிலைக்கு உள்ளாகியிருப்பதால், அதை முன்னிறுத்தித் தமிழ்த்தேசியத்தையும் முஸ்லிம் தேசியத்தையும் செயற்படுத்த முடியாதுள்ளது. இந்தத் தணிவு பதுங்குதலா அல்லது மாற்றத்துக்கான தொடக்க நிலையா என்பதில்தான் குழப்பங்களும் கேள்விகளும் நிறைகின்றன.

மெய்யாகவே மாற்றத்தை நோக்கியதாக இந்தத் தணிவு நிலை ஏற்படுமாக இருந்தால் அதை வரவேற்க வேண்டும். அப்படி நடந்தால் NPPயும் அனுரவும் வரலாற்றில் கொண்டாடப்படும் சக்திகளாகக் காணப்படும் சூழல் உருவாகும். இலங்கைத் தீவும் புதியதொரு நிலையை எட்டும். இலங்கையின் அரசியல் பண்பாடும் போக்கும் சிறக்கும். அது இந்தப் பிராந்தியத்தில் புதியதொரு அரசியற் பண்பாட்டுக்கு வித்திடுவதாகவும் அமையும்.

எனினும் எதையும் உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியாத ஒரு நிலையும் காணப்படுகிறது. இந்தத் தளம்பல் பல தரப்பிலும் உண்டு.

1.எதிர்கால அரசியலை எப்படி மேற்கொள்வது என்ற கேள்வி NPP யிடம் இருப்பதை உணரலாம். ஏற்கனவே அதனிடம் காணப்பட்ட வேகமும் தீவிரத் தன்மையும் ஆட்சி பீடமேறிய பின்னர் காணப்படவில்லை. அதிரடி அறிவிப்புகளைச் செய்த NPP தற்போது அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சற்று மெதுவான — தணிவான போக்கையே கடைப்பிடிக்கிறது. இதற்கான காரணத்தையும் நாம் புரிந்து கொள்ள முடியும். NPPஒரு முற்று முழுதான புரட்சிகரச் சக்தி அல்ல. புரட்சிகர எண்ணங்களைக் கொண்ட அரசியல் சக்தியெனலாம்.

அதாவது ஆயுதப் போராட்ட அமைப்பிலிருந்து பரிணாமமடைந்த தேர்தல் வழியான ஜனநாயக அரசியற் சக்தியாகும்.

புரட்சிகரச் சக்தி ஒன்று ஆயுதப் புரட்சி மூலமோ அல்லது மக்கள் புரட்சியின் மூலமோ அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஒரு வகை. அப்படிக் கைப்பற்றப்படும் அதிகாரமானது, ஏற்கனவே இருக்கின்ற கட்டமைப்பை உடைத்து (Breaking the structure) அரங்கேறுவது. அல்லது மீறுவதாகும். அங்கே ஏற்கனவே இருந்த விதிமுறை

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -




களும் நடைமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும் என்ற கட்டாயத்துக்கு இடமில்லை. அது முழு அதிகாரத்தின் சுயாதீனத்தைக் கொண்ட எழுச்சியும் ஆட்சியுமாக இருக்கும்.

இங்கே நிகழ்ந்திருப்பது அதுவல்ல. இது ஜனநாயக வழிமுறை மூலமான தேர்தலுக்கூடாக அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கப்பட்டதாகும். ஆகவே இந்த மாற்றமும் மாற்றுத் தலைமையும் இன்னொரு வகையானது. இதில் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்ட அல்லது அவற்றை அனுசரித்த ஒரு ஆட்சியே நடைமுறைப்படுத்தப்படுகிறது. அதைத் தான் செய்ய முடியும். அதற்கமையவே மாற்றங்களும் அதற்கான கால அட்டவணையும் இருக்கும். எதையும் (22ம் பக்கம் பார்க்க)




# Friends MATRIMONY



**www.friendsmatrimony.com**
**+1 647 709 1761 | +1 647 709 1536**
**+1 647 700 7208 | +1 416 477 6854**
**GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257**
**Toronto, M1S 0C2**



## மணமகள்

**ID08120036 F**
32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degre , Academic Advisor , Canada

**ID08119833 F**
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08118630 F**
30yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Case Management.. , Canada

**ID08117127 F**
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08120581 F**
29yrs, 5'4" , Single , Thiruvaathirai , 6 Sevai , Ph.D , Senior Engineer , United States

**ID08120471 F**
32yrs, 5'9" , Awaiting Divorce , Not Specified , N/A Sevai , Masters Degree , IT Project.. , Singapore

**ID08120453 F**
31yrs, 5'4" , Single , Poorattathi , N/A Sevai , Masters Degree , Senior Manager , Canada

**ID08120442 F**
28yrs, 5'7" , Single , Moolam , 12 Sevai , Bachelors.. , Goverment.. , Canada

**ID08120391 F**
28yrs, 5'2" , Single , Thiruvonam , N/A Sevai , Bachelors.. , Service Support.. , Canada

**ID08120320 F**
29yrs, 5'4" , Single , Kettai , 4 Sevai , Bachelors.. , Finance Professional , Canada

**ID08120054 F**
34yrs, 5'5" , Divorced , Rohini , 4 Sevai , Diploma , Farmacy Technician , Canada

**ID08119833 F**
32yrs, 5'4" , Single , Aayilyam , 4 Sevai , Diploma , Pharmacy Technician , Canada

**ID08119603 F**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08119509 F**
28yrs, 5'4" , Single , Visaakam , 7 Sevai , Bachelors.. , Secretary , Canada

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08115124 F**
40yrs, 5'2" , Single , Uthiraadam , N/A Seva , Bachelors.. , Pharmacist , New Zealand

**ID08115839 F**
30yrs, 5'5" , Single , Visaakam , N/A Sevai , Bachelors.. , Human Resource.. , Canada

**ID08120732 F**
30yrs, 5'6" , Single , Chithirai , 7 Sevai , Masters Degree , Doctor , Sri Lanka

**ID08120728 F**
40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F**
24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723 F**
41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120722 F**
32yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Nurse , Sri Lanka

**ID08120721 F**
23yrs, 5'2" , Single , Punarpoosam , N/A Sevai , Bachelors.. , Study , Sri Lanka

**ID08120718 F**
29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120711 F**
30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120695 F**
28yrs, 5'4" , Single , Swaathi , 5 Sevai , Bachelors.. , Financial. , Canada

**ID08120685 F**
22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120675 F**
29yrs, 5'4" , Single , Pooram , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120667 F**
25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650 F**
26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka



## மணமகன்

**ID08120717 M**
33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08120715 M**
27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709 M**
38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120673 M**
35yrs, 5'11" , Single , Swaathi , 12 Sevai , Diploma , Business Owner , Canada

**ID08120642 M**
45yrs, 5'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Physicians.. , Canada

**ID08120616 M**
33yrs, 5'5" , Single , Bharani , 11 Sevai , Bachelors.. , Insurance.. , Canada

**ID08120613 M**
32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer , Canada

**ID08120474 M**
28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120335 M**
30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08117127 M**
42yrs, 6' , Divorced , Avittam , 1 Sevai , Masters Degree , Auditor , Canada

**ID08113686 M**
45yrs, 5'7" , Single , Pooram , 2 Sevai , Diploma , Staff- Air.. , Canada

**ID08120639 M**
35yrs, 5'6" , Single , Makam , 8 Sevai , Bachelors.. , Own Bussiness , United States

**ID08120583 M**
32yrs, 5'10" , Single , Poorattathi , 9 Sevai , Bachelors.. , Project Engineer , Canada

**ID08120564 M**
33yrs, 5'11" , Single , Hastham , 8 Sevai , Bachelors.. , Website Administrator ,Canada

**ID08120356 M**
30yrs, 6' , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Electric , Canada

**ID08120270 M**
34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08120144 M**
35yrs, 5'9" , Single , Visaakam , 8 Sevai , Diploma , Own Business.. , Canada

**ID08119698 M**
33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120481 M**
30yrs, 5'7" , Single , Poorattathi , 7 Sevai , Bachelors.. , Research Associate , Canada

**ID08116778 M**
37yrs, 5'9" , Single , Uthiram , 12 Sevai , Bachelors.. , Manager Financial.. , Canada

**ID08116404 M**
43yrs, 5'4" , Single , Makam , N/A Sevai , High School , Business , Sri Lanka

**ID08115828 M**
31yrs, 5'9" , Single , Mrigasheersham , 10 Sevai , Bachelors.. , Trading Associate , Canada

**ID08111978 M**
45yrs, 5'5" , Single , Anusham , 2 Sevai , High School , Magna INC , Canada

**ID08120734 M**
35yrs, 5'7" , Seperated , Not Specified , N/A Sevai , Masters Degree , Fama prodecsoen.. , Sri Lanka

**ID08120733 M**
29yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Research Technician , United States

**ID08120731 M**
33yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Postgraduate.. , HDFC bank.. , Sri Lanka

**ID08120730 M**
28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering ,Sri Lanka

**ID08120729 M**
32yrs, 5'7" , Single , Kettai , 10 Sevai , Bachelors.. , Quantity Surveyor , United Arab Emirates

**ID08120724 M**
30yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior engineer , Sri Lanka

**ID08120720 M**
35yrs, 5'5" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Teacher , Sri Lanka

# இனியும் தும்புத்தடியை நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப்பார்களா?

பாராளுமன்றத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்கலாம்? என்ற கேள்வியும் விவாதமும் தமிழ் மக்களிடத்திலே வழமையை விடக் கூடுதலாகக் காணப்படுகிறது. சனங்கள் சற்றுச் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். மாற்றங்களை விரும்புகிறார்கள். பழைய தலைகளை விலக்க வேண்டும் என்ற விருப்பம் சற்றுக் கூடுதலாகத் தெரிகிறது.

புதியவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மெய்யாகவே மக்களுடைய பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, அதற்காகச் செயற்படக் கூடியவர்களையும் நேர்மையானவர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என்று பலரும் எண்ணுகிறார்கள். இதனால் இந்தத் தேர்தற் களம் முற்றிலும் வேறாகக் காட்சியளிக்கிறது.

இதுவரையிலும் தமிழ் மக்களிடம் ஒரு சூத்திரமிருந்தது. பெருந்திரளானோர் எந்தக் கேள்வியுமில்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதாவது வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பார்கள். இவர்கள் அரசியல் உரிமையை முதன்மைப்படுத்திச் சிந்திப்போராகும். அல்லது அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டோர் எனலாம். இன்னொரு விதமாகச் சொன்னால் இவர்கள், தமிழரசுக் கட்சியின், விடுதலைப் புலிகளின் அரசியலைப் பின் தொடர்கின்றவர்களாக இருந்தனர்.

இதனால் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை விட, தமக்குரிய சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்களாகவே இருந்தனர். என்பதால் தான், 'நாம் தும்புத்தடியை நிறுத்தினாலும் அதற்குத் தமிழ் மக்கள் வாக்களிப்பார்' என்று கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இரா. சம்மந்தன் திமிரோடு (மக்களை மலினப்படுத்தி) சொல்லக் கூடியதாக இருந்தது. உண்மையும் அதுதான். அதனால் தான் எந்தக் கேள்வியுமில்லாமல் பெருந் திரளான தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வீட்டுச் சின்னத்துக்கு வாக்களித்து வந்தனர்.

மறு தொகுதியினர் வடக்கில் யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தா, அங்கயன், விஜயகலா போன்றோருக்கு ஆதரவளிப்பவர்கள். கிழக்கில் சந்திரகாந்தன், வியாழேந்திரன் போன்றோரை ஆதரிப்பர். இவர்கள் அபிவிருத்தி, முன்னேற்றம் போன்றவற்றை முன்னிலைப்படுத்திச் சிந்திக்கும் தரப்பினராகும். அதற்காக இவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறையை ஆதரிப்பவர்களோ, தமிழ் மக்களுக்கான உரிமையை மறுப்பவர்களோ இல்லை.

ஆனால் இவர்களும் தமது ஆதரவின் பெறுமானத்தைக் குறித்தும் நியாயத்தைக் குறித்தும் சிந்திப்பதில்லை. அதை மீள்பரிசீலனை செய்வதில்லை.

இந்த அரசியலின் விளைவுகள், பெறுமானங்கள், முறைமைகளைக் குறித்து பேசவதோ விவாதிப்பதோ கிடையாது. அப்படி விவாதிக்க முற்பட்டால், தமிழ்த்தேசியத் தரப்பினரைப் போல, அதை ஏற்றுக் கொள்ளாமல், விமர்சனங்களை முன்வைப்போரை அவமதித்து, நிராகரித்து வந்தனர். பதிலாக ஏதோ நடக்கிறது. கிடைப்பது லாபம் என்ற அளவில் தமது அரசியலை மேற்கொண்டு வந்தனர். தம்மைச் சற்று நிதானப்படுத்திச் சிந்தித்திருந்தால், இந்த அரசியலுக்கான அடித்தளத்தையும் முறைமை ஒன்றையும் உருவாக்கியிருக்க முடியும். அதைக் குறித்து இவர்கள் சிந்திக்கவில்லை.

ஆக இரண்டு தரப்புகளும் தமக்குரிய (தாம் உருவாக்கிய அல்லது அப்படி அமைந்த) குழசஅரடய வின்படி தமது அரசியலைச் செய்து வந்தனர். அதற்கேற்ற வகையில் வாக்காளர்களும் பிரிந்திருந்ததால் அரச எதிர்ப்புத் தரப்புக்கும் இடமிருந்தது. அரச ஆதரவுத் தரப்புக்கும் வாய்ப்பிருந்தது. அவரவர் தத்தமது தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்டுமிருந்தனர். இதற்குத் தோதாக ஒவ்வொரு தரப்பும் தங்களுடைய அரசியலுக்கு நிறமூட்டிக் கொண்டிருந்தனர். ஒரு தரப்பு தமிழ்த்தேசியம் என. மறுதரப்பு அபிவிருத்தி அரசியல் என்று.

இப்படி இரண்டு பிரிகோடுகளில் தமிழ் அரசியல் பயணித்துக் கொண்டிருந்ததால் இரண்டு வகையான அரசியலாளர்களும் தமக்குரிய இடம் எப்படியோ உறுதியாக உண்டு என்ற



நம்பிக்கையுடனிருந்தனர். சிலவேளை இதில் சிறிய அளவிலான அசைவுகள் நடக்கும். அப்படி நடக்கும் போது டக்களஸ் தேவானந்தா ஒன்றோ இரண்டோ கூடுதலான ஆசனங்களைப் பெறுவார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒன்று இரண்டு ஆசனங்களை இழக்க நேரிடும். இன்னொரு வகையில் சொல்வதென்றால், அரச ஆதரவுத் தரப்பு ஒன்றிரண்டு ஆசனங்களைக் கூடுதலாகப் பெறும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றிரண்டு ஆசனங்களை இழக்கும். ஆனால், பெரிய மாற்றங்கள் ஏற்படாது.

இந்தத் தடவை இந்தச் சூத்திரத்துக்கு அடி விழுந்துள்ளது. இப்போதுள்ள களநிலவரத்தின்படி வடக்கிலும் கிழக்கிலும் வழமைக்கு மாறான வகையிலான தேர்தல் முடிவுகளே வரப் போகின்றன. ஏனென்றால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, உடைந்து நொறுங்கி இல்லாமற்போய் விட்டது. பதிலாக 'தமிழ்த்தேசியம்' என்ற அடையாளத்தோடு (மஞ்சள் — சிவப்பு நிறத்தில்) பல கட்சிகளும் குழுக்களும் போட்டியில் இறங்கியுள்ளன. இவற்றின் பெயரையெல்லாம் மனதில் வைத்திருப்பதற்குக் கடவுளாலும் முடியாது. சாத்தானாலும் இயலாது.

எல்லாவற்றுக்கும் ஒரு அடைமொழியைப் போல முன்னொட்டில் 'தமிழ்த் தேசியம்' என்ற சொல் மட்டும் உள்ளது. அந்தச் சொல்லையும் மஞ்சள் சிவப்பு நிறத்தையும் இணைத்துக் கொண்டால், தமிழ் மக்களுடைய அரசியல் சரியாகி விடும் என்று இவை நம்புகின்றன. தமிழ்ச் சனங்களை அந்தளவுக்கு மலினமாகக் குறைத்து மதிப்பிட்டுள்ளன. இந்தக் குறைபாடு, தும்புத்தடியை நிறுத்தினாலும் தமிழ்மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று சொன்ன மூத்த தலைவரான சம்மந்தனிலிருந்து இன்றைய இளைய தலைமுறை உறுப்பினர்கள் வரையில் தொடர்கிறது.

இதில் எந்தத் தரப்பும் மாறுதலைக் கொள்ளவில்லை என்பதால் எந்தத் தரப்பை ஆதரிப்பது என்ற குழப்பம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஏனென்றால், எல்லாமே தமிழ்த்தேசியம் எனவும் மஞ்சள் — சிவப்பு நிறத்திலும் தான் வந்து முன்னிற்கின்றனவே தவிர, தாம் எந்த அடிப்படையில் ஏனையவற்றிலிருந்து வேறுபடுகிறோம்? தம்முடைய தனித்துவம் என்ன? எதிர்கால அரசியலை எந்த அடிப்படையில் முன்னெடுப்போம்? அதற்கான பொறிமுறைகளும் வழிமுறையும் என்ன? கடந்த காலத் தவறுகளுக்கும் பின்னடைவுகளுக்குமான காரணங்களும் பாத்திரவாளிகளும் யார்? அதற்கான பொறுப்பை ஏற்பது எவர்? கடந்த காலத் தோல்விகளிலிருந்து மீள்வது எப்படி? புதிய அரசியலுக்கான உத்தரவாதம் என்ன? அதைச் செயற்படுத்தும் கால அட்டவணை எப்படியானது? என எதைப் பற்றியும் எந்தக் கட்சியும் எந்தக் குழுவும் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை.

தமிழ்த்தேசியக் கட்சிகளில் அல்லது மஞ்சள் சிவப்புக் குழுக்களில் பெரியளவில் இருப்பவை நான்காகும். ஒன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி. இது வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிறது. அடுத்தது, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இது சங்குச் சின்னத்தில் நிற்கிறது. அடுத்தது, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி என்ற இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ். இது காங்கிஸின் சின்னமான சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிறது. (பேசாமல் காங்கிரஸின் பேரிலேயே நிற்கலாம். இடையில் என்ன தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என நீங்கள் முணு முணுப்பது கேட்கிறது. அது அப்படித்தான்... 'சும்மா ஒரு இதுக்குத் தான்' அப்படிச் சொல்வது. அதையெல்லாம் பெரிதுபடுத்தாமல் தொடர்ந்து படியுங்கள்).

அடுத்தது, தமிழரசுக் கட்சியிலிருந்து தேர்தலுக்காகப் பிரிந்தவர்கள், ஐங்கரநேசனின் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தோடு கூட்டிணைந்து நிற்கிறார்கள். இவர்கள் கையில் ஏந்தியிருப்பது மாம்பழமாகும். ஐந்தாவதாகவும் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், முன்னாள் வடமாகாண முதலமைச்சரும் பின்னாளில் சாராயத் தவறணை விடயத்தில் சிக்கியிருப்பவருமான விக்கினேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி. இதனுடைய சின்னம் மான்.

இப்படிப் பல அணிகளாகச் சிதறியிருக்கும் தமிழ்த்தேசியத் தரப்புகளின் வாக்குகளை எப்படி ஒன்று திரட்டுவது? என்ற கேள்வியும் கவலையும் தமிழ்த்தேசிய ஆதரவாளர்களிடம் எழுந்துள்ளது. இந்தக் கவலைக்கு அவர்களும் பொறுப்பாளிகளே!

ஏனென்றால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உள்மோதல்களைக் கண்டிக்காமலும் கண்டு கொள்ளாமலும் இருந்ததன் விளைவுகளையே இப்போது நேரில் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது. இதனால் முன்னர் கண்ணை மூடிக்கொண்டு வீட்டுச் சின்னத்துக்குக் கீறிய நிலை போய், இப்போது எந்தச் சின்னத்தைத் தேர்வது? யாரை ஆதரிப்பது? எதை நம்புவது என்று தெருவில் நின்று யோசிக்க வேண்டிய நிலை வந்துள்ளது.

ஆனால் இதையெல்லாம் பொருட்படுத்தாமல், தமக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என ஒவ்வொரு தரப்பும் மனக்கணக்குப் போட்டுக் கொண்டிருக்கின்றன. சங்குக் கூட்டணி சொல்கிறது, தாம் எப்படியும் 10 இடங்களைக் கைப்பற்றுவோம் என. தமிழரசுக் கட்சி பிரகடனப்படுத்துகிறது தனக்கு எப்படியும் 12 இடங்கள் கிடைக்கும் என. சைக்கள் கம்பனி சொல்கிறது, தாமே கூடுதலான இடங்களைக் கைப்பற்றுவோம் என. அப்படிப் பார்தால், அவர்களுக்கு எப்படியும் 14 இடங்களுக்கு மேல் கிடைக்க வேண்டும். இதெல்லாம் நடக்குமா என்று உங்கள் உள்மனது கேட்கிறது. ஏன், வாய்விட்டே நீங்கள் சிரிக்கிறீர்கள் என்பதும் தெரியும். ஆனால் இவர்கள் இப்படிக் கணக்குப் பார்த்தும் கணக்கு விட்டும் வந்ததன் பழக்கமே இப்போதும் இப்படிச் சொல்வதற்குக் காரணமாகும்.

அதனால் தான் சனங்களை மடையர்களாக்கியோ என்னவோ எப்படியாவது தமக்கான வாக்குகளைக் கவர்ந்து விட வேண்டும் என்பதிலேயே குறியாக இருக்கின்றன, அனைத்துக் கட்சிகளும். இதற்காகச் சில கட்சிகள், தனிநபர்களை (சுமந்திரன் போன்றோரை) குறி வைத்துத் தாக்குகின்றன. பொதுவாக அனைத்துத் தரப்பும் தம்மை மாற்றுக் குறையாத தங்கம் எனவும் மற்றவர்கள் போலி என்றும் காட்ட முற்படுகின்றன.

இது மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. கோபத்தை உருவாக்கியிருக்கிறது. இதன் விளைவுகளைச் சமூகவலைத்தளங்கள் தொடக்கம் மக்களின் பொது உரையாடல் வெளிகளில் தெளிவாகப் பார்க்கமுடிகிறது. தமிழ்த்தேசியத் தலைமைகளையும் கட்சிகளையும் வறுத்தெடுக்கும் சமூக வலைத்தளப் பதிவுகளே அதிகமாகப் பொது வெளியில் காணப்படுகின்றன.

இந்தச் சூழலில், தமது அடுத்த தெரிவு என்ன? எந்தத் தரப்பை அல்லது யாரை ஆதரிக்கலாம் என்ற கேள்வியோடு மக்கள் நிற்கிறார்கள்.

இந்தக் கேள்வியே அவர்களை விவாதத்துக்குத் தூண்டியிருக்கிறது. அவர்கள் இரண்டு வகையில் பிரதானமாகச் சிந்திக்கின்றனர்.

1.தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையின் அடிப்படையில் இந்த உடைவையும் சிதைவையும் பார்த்துச் சினமடைந்திருக்கின்றனர். கவலை கொண்டுள்ளனர். இதனால் 'தமிழ் மக்கள் ஒன்றாக நிற்க வேண்டும். தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும். தேசமாகத் திரள வேண்டும். தமிழ்த்தேசியத் தரப்புகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டும்' என்றெல்லாம் சொல்லிக் கொண்டு, அதற்கு மாறாகச் செயற்படும் (நாடகமாடும்) கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள்.(22ம் பக்கம் பார்க்க)

# நிஜ்ஜார் கொலை வழக்கு:- அமெரிக்கப் பத்திரிகையிடம் இந்திய அமைச்சர் அமிர்ஷா பெயரைக் கூறியதாக கனடா அமைச்சர் ஒப்புதல்

கனடா குடிமக்களை அச்சுறுத்தும் அல்லது கொல்லும் நடவடிக்கைகளுக்கு இந்திய அரசின் மூத்த அமைச்சர் ஒருவர் ஒப்புதல் அளித்ததாக அந் நாட்டின் குடிமைப் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக் குழுவிடம் கனடாவின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் டேவிட் மோரிசன் தெரிவித்துள்ளார்.

29 ஒக் 2024 செவ்வாய்கிழமை அன்று கனடாவில் குடிமைப் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்புக் குழுவின் விசாரணை ஒன்று நடந்தது. அப்போது அக்குழுவின் துணைத் தலைவரும் கன்சர்வேட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரக்கேல் டான்சோ கனேடிய குடிமக்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து கேள்விகளை எழுப்பினார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் வான்கூவர் அருகே 45 வயதான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின்னணியில் இந்தியாவின் பங்கு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியிருந்தார்.

விசாரணையின் போது கனடாவில் நடக்கும் குற்றங்களில் இந்திய உள்துறை அமைச்சருக்கு தொடர்பு இருப்பதாக கனடா அரசு சார்பாக `தி வாஷிங்டன் போஸ்ட்' செய்தித்தாளிடம் தெரிவித்தது யார்? என்று அந்த குழுவின் துணைத் தலைவர் ரக்கேல் டான்சோ அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நத்தாலி ட்ரூயினிடம் கேள்வி எழுப்பினார்.

இது போன்ற தகவல்களை பத்திரிகையாளர்களிடம் அரசு பகிர்ந்து கொள்ளவில்லை', என்று நத்தாலி ட்ரூயின் பதில் அளித்தார்.

அக்டோபர் 14 ஆம் தேதி அன்று `தி வாஷிங்டன் போஸ்ட்' என்ற அமெரிக்க செய்தித் தாளில் வெளியான ஒரு செய்திக்கட்டுரையை பற்றி ரக்கேல் டான்சோ கேள்வி கேட்டுக்கொண்டிருந்தார்.

அந்த செய்தியில் கனடாவில் சீக்கிய பிரிவினைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியாவின் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உத்தரவிட்டதாக அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி குறிப்பிடப்பட்டிருந்தது. பத்திரிகையாளருக்கு யார் அந்த தகவலை கொடுத்தது? உங்களுக்கு அது பற்றி தெரியுமா? இந்த தகவலை நீங்கள் கொடுக்கவில்லை தானே? என்று ரக்கேல் டான்சோ கேட்டார்.

இந்த விசாரணையியின் போது கனடாவின் துணை வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் மோரிசனும் இருந்தார். மோரிசன், நீங்கள் இது குறித்து கருத்து தெரிவிக்க முடியுமா? இந்த தகவலை நீங்கள் வழங்கினீர்களா? என்று டேவிட் மோரிசனிடம் ரக்கேல் டான்சோ கேட்டார்.

`ஆம், பத்திரிகையாளர் ஒருவர் என்னை அழைத்து இது பற்றி கேட்டார். நான் தான் அந்த நபரைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்தேன்', என்று டேவிட் மோரிசன் பதில் அளித்தார்.

அந்த பத்திரிகையாளர் பல்வேறு தரப்புகளிடம் இருந்து பெற்ற தகவல்களை வைத்து இது குறித்து நிறைய எழுதியிருந்தார். அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபரைப் பற்றி உறுதிப் படுத்தும்படி என்னிடம் கேட்டார். நான் அதை உறுதிப்படுத்தினேன்', என்று டேவிட் மோரிசன் கூறினார். ஆனால் இந்திய உள்துறை அமைச்சர் பற்றி டேவிட் மோரிசன் ஏதும் கூற வில்லை.

செவ்வாய்க்கிழமை அன்று வெளிவந்த இந்த விஷயம் குறித்து கனடா



விலுள்ள இந்திய தூதரக அலுவலகமும், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகமும் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால், இந்த விவகாரத்தில் கனடா முன் வைத்த குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று இந்திய அரசு ஏற்கனவே கூறியுள்ளது.

நிஜ்ஜார் கொலை குறித்த செய்தி முதலில் தி வாஷிங்டன் போஸ்ட் செய்தித் தாளில் வெளியான போது, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இது குறித்து தனது கருத்தினை தெரிவித்திருந்தது.

இந்த செய்தி ஒரு தீவிரமான விஷயத்தில் நியாயமற்ற மற்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைக்கிறது', என்று இந்த செய்திக்கட்டுரை குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

குற்றவாளிகள் மற்றும் பயங்கரவாதிகளின் நெட்வொர்க் குறித்து அமெரிக்க அரசு கவலை எழுப்பியதைத் தொடர்ந்து இந்திய அரசு ஒரு உயர் நிலைக் குழுவை அமைத்து இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகிறது. இதைப் பற்றி ஊகங்களையும் பொறுப்பற்ற கருத்துகளையும் தெரிவிப்பது பயனுள்ளதாக இருக்காது என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

கனடாவில் நடந்த குற்றங்களில் இந்திய ஏஜெண்டுகளுக்கு தொடர்பு இருப்பதாக கனடா அரசு குற்றம் சாட்டியது. இந்த குற்றங்களில் கொலை மக்களை மிரட்டி பணம் பறித்தல் மற்றும் அச்சுறுத்தல்கள் ஆகியவை அடங்கும். இந்த ஏஜெண்டுகள் கனடா குடிமக்களுக்கு தீங்கு விளைவிப்பதற்கான செயல்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக கனடா கூறியிருந்தது.

இந்திய அரசின் உயர் அதிகாரிகளுக்கு மட்டுமே இதுபற்றி கூடுதல் தகவல்கள் தெரிந்திருக்கும் என்று கனடா அதிகாரிகள் செவ்வாய்கிழமைக்கு முன் வெளிப்படையாக தெரிவித்து வந்தனர்.

கனடாவில் நடக்கும் பெரிய அளவிலான குற்றங்களில் இந்திய அரசின் ஏஜெண்டுகள் உடந்தையாக இருப்பதாக இரண்டு வாரங்களுக்கு முன்பு கனடாவின் காவல்துறை தெரிவித்த அதிர்ச்சியூட்டும் கருத்து குறித்தும் இக்குழுவில் இடம்பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்பினர்.

ராயல் கனேடிய மவுண்டன் எனப்படும் கனேடிய காவல்துறையின் தலைவர் மைக் டுஹெம் செவ்வாய்கிழமையன்று இந்த குழுவிடம் சாட்சியம் அளித்தார். இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் பிற ஊழியர்கள் இந்திய அரசாங்கத்திற்காக தகவல்களை சேகரித்ததை காவல்துறையிடம் உள்ள சாட்சிகள் உறுதிப்படுத்துகின்றன என்று அவர் கூறியிருந்தார்.

கனடாவில் கொலை, மக்களை மிரட்டி பணம் பறித்தல் மற்றும் மிரட்டல் ஆகிய குற்றச் செயல்களை செய்யுமாறு அவர்கள் தூண்டியதாக மைக் டுஹெம் தெரிவித்திருந்தார். இந்த வழக்கில் (நிஜ்ஜார் கொலை) இந்தியாவுக்கு பெரிய அளவில் பங்கு உள்ளது என்பதற்கான வலுவான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன.', என்று கனடாவின் அரசு செய்தி நிறுவனமான சிபிசிக்கு அளித்த பேட்டியில் மைக் டுஹெம் கூறியிருந்தார்.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல், 13 கனேடிய குடிமக்களுக்கு இந்திய ஏஜென்டுகளால் ஆபத்து நிகழக்கூடும் என்று காவல்துறை எச்சரித்திருப்பதாக மைக் டுஹெம் கூறினார்.

கனடா அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்த பிறகு இந்தியா–கனடா உறவில் மேலும் விரிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் நடத்தும் இந்திய எதிர்ப்புப்



போராட்டங்கள் மற்றும் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது.

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கும் தொடர்பு இருப்பதாக கனடா குற்றம் சாட்டி வரும் நிலையில், இந்தியா அதனை மறுத்து வருகிறது. சமீப காலமாக இந்த விவகாரத்தால் இரு நாடுகளும் தத்தமது தூதரக அதிகாரிகளை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் விலக்கிக் கொண்டன.

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிஜ்ஜாரின் கொலைக்குப் பிறகு, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அந்த நாட்டின் நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இந்தக் குற்றத்தில் இந்திய அதிகாரிகளின் தொடர்பு குறித்து கனடாவிடம் `உறுதியான ஆதாரம்' இருப்பதாக அவர் தெரிவித்தார். இருப்பினும், கனடா அரசாங்கம் உறுதியான ஆதாரங்கள் எதையும் முன்வைக்கவில்லை.

இந்தியா இந்த குற்றச்சாட்டை முற்றிலும் நிராகரித்தது. கனடாவிடம் அதற்கான ஆதாரத்தையும் இந்தியா கேட்டது.

கனேடிய தூதரக அதிகாரிகளை வெளியேற்றுவதாக இந்தியா அறிவித்த பிறகு, இந்திய வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில், `ட்ரூடோ அரசாங்கம் இந்திய அதிகாரிகளுக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் எந்த ஆதாரத்தையும் இந்தியாவிற்கு வழங்கவில்லை' என்று குறிப்பிட்டிருந்தது. தனிப்பட்ட அரசியல் ஆதாயங்களுக்காக இந்தியாவை களங்கப்படுத்தும் முயற்சி இது என்று இந்தியா குற்றம் சாட்டியது.

ஆனால் தற்போது வரை ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்திய ஏஜெண்டுகளுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறி வருகிறார். கடந்த பதினைந்து நாட்களாக தூதரக அதிகாரிகளை வெளியேற்றிய விவகாரம் முக்கியத்துவம் பெற்றுள்ள நிலையில், ட்ரூடோ தனது குற்றச்சாட்டுகளில் உறுதியாக இருப்பதாக தெரிவித்தார்.

ஆனால் அவரிடம் `உரிய ஆதாரங்கள்' இல்லை. முதன் முறையாக, இந்த விவகாரத்தில் அவர் பகிரங்கமாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தபோது, அவரிடம் புலனாய்வு தகவல்கள் மட்டுமே இருந்தன. இந்தியாவிடம் கனடா எந்த ஆதாரத்தையும் வழங்கவில்லை. இந்த வழக்கில் இந்தியாவுடன் இணைந்து பணி செய்யவே விரும்பியது. ஆனால் இந்தியா தொடர்ந்து ஆதாரங்களைக் கேட்டது' என்று வெளிநாட்டு தலையீடு ஆணையத்திடம் கனடா பிரதமர் கூறியிருந்தார். ஆதாரங்கள் உங்கள் பாதுகாப்பு ஏஜென்சிகளிடமே உள்ளன' என்று மட்டும் பதிலளித்ததாக அவர் தெரிவித்தார்.

கனடாவின் இறையாண்மையை இந்தியா மீறியதற்கான தெளிவான சான்றாக இது இருக்கிறது', என்று விசாரணைக் குழுவிடம் அவர் கூறினார்.

சீக்கிய பிரிவினைவாதிகளுக்கு கனடா அளிக்கும் சலுகை இந்தியாவுக்கு மட்டுமல்ல, கனடாவுக்கும்கூட சரியானது அல்ல என்று இந்தியா கூறியிருந்தது. 2024 ஆம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில் கூட, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நிஜ்ஜார் கொலை பற்றியும் இந்தியாவுடனான உறவுகள் பற்றியும் மீண்டும் குறிப்பிட்டார். இந்தியா அப்போதும் மறுப்பு தெரிவித்தது. நன்றி:- பிபிசி

# தமிழருக்கு தேசிய மக்கள் சக்தி காட்டும் திசை தெளிவாக இருக்க வேண்டும்

– த.கோபாலகிருஷ்ணன் –

21.09.2024 அன்று நடைபெற்று முடிந்த இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயக்காவைத் தெரிவு செய்ததன் மூலம் இந்நாட்டு அரசியலில் ஒரு முறைமை மாற்ற–பண்பு மாற்ற எதிர்பார்ப்பைக் குறிப்பாக ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகமற்ற–சட்டம் ஒழுங்கைப் பாரபட்சமின்றி முறையாகப் பேணக் கூடிய–வாரிசு அரசியலற்ற ஓர் அரசாங்கம் அமைய வேண்டுமென்ற அவாவை தென்னிலங்கைச் சிங்களப் பெரும்பான்மைச் சமூகம் வெளிப்படுத்தியுள்ளது.

அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணத் தமிழர்களைப் பொறுத்தவரை கடந்த ஜனாதிபதித் தேர்தல்களை விடவும் இம்முறை நடந்துள்ள தேர்தலில் குறிப்பிட்ட தொகையினர் அனுரகுமார திசநாயக்காவுக்கு வாக்களித்தமைக்குப் பிரதான காரணங்களாவன.

தமிழ்த் தேசியக் கட்சிகள் என நாமம் சூட்டப்பட்ட கட்சிகளின் தேர்தல் மைய ஏமாற்று கதிரைக் கனவு அரசியலின் மீது ஏற்பட்ட வெறுப்பும் விரக்தியும் அடிப்படைக் காரணம்.

மற்றக் காரணம், கடந்த காலங்களில் வலதுசாரிக் கட்சிகள் நிறுத்திய வேட்பாளர்களுக்கு வாக்களித்ததன் மூலம் எந்த நன்மைகளையும் அடைய முடியவில்லை. அதனால் மாற்றம் வேண்டி ஒரு இடதுசாரித் தலைவருக்கு வாக்களித்துள்ளனர். இதன் எதிர்பார்ப்பு இனவாதச் செயற்பாடுகளற்றதோர் அரசாங்கமே தவிர இனப் பிரச்சனைக்கான திருப்தியான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையல்ல.

இன்னொரு காரணம், முழு நாட்டிலும் ஏற்படும் முறைமை மாற்றத்தினால் அதாவது அம் முறைமை மாற்றத்தின் அம்சங்களான ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகமற்ற அரச நிர்வாகம்–சட்டம், ஒழுங்குகள் பாரபட்சமின்றி முறையாகப் பேணப்படும் காவல் துறை மற்றும் நீதித்துறைக் கட்டமைப்பு– பொருளாதாரச் சீர்திருத்தங்களினால் அடையக்கூடிய வாழ்வாதார நன்மைகள் என்பன 'நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிவது போல்' வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கும் இலங்கையர் என்ற ரீதியில் சுவறும் என்கின்ற எதிர்பார்ப்பு.

உண்மையில், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களில் குறிப்பிட்ட தொகையினர் வாக்களித்தது 'தேசிய மக்கள் சக்தி' என்ற அரசியல் கட்சிக்கு அல்ல் அதன் தலைவர் அனுரகுமார திசநாயக்கா என்ற ஆளுமை மீது ஏற்பட்ட அரசியல் வசீகரமும் நம்பிக்கையுமே அவர்களைத் 'திசை காட்டி'ச் சின்னத்துக்கு வாக்களிப்பதற்கான அகத் தூண்டலை ஏற்படுத்தியதே தவிர மாறாகக் கட்சியின் கொள்கைகள் கோட்பாடுகளைக் கற்றுணர்ந்தனாலோ மேலும் கட்சி உறுப்பினர்களின் தேர்தல் பரப்புரையினாலோ அல்ல.

மட்டுமல்லாமல், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஆரம்பத்தில் தானாகவே முன்வந்து 13 ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்யப் போவதாக அரசியல் கட்சிகளைக் கூட்டி அறிவிப்புச் செய்தவேளை அதற்குத் தான் ஆதரவு என அனுரகுமார திசநாயக்கா அறிவித்திருந்தமையும் ஜனாதிபதித் தேர்தலின் போது தனது ஆட்சியில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென்றும் அதுவரைக்கும் தற்போதைய அரசியலமைப்பின் அங்கமாகவுள்ள 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்



படுத்தப்படுமென்றும் உறுதியளித்திருந்தமையும் அனுரகுமார திசநாயக்கவுக்கு வாக்களிப்பதற்கான அகத் தூண்டலை ஏற்படுத்தியிருக்கக்கூடும். ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகங்களற்ற நாடு ஒட்டுமொத்த இலங்கையர்களுக்கும் தேவைதான். அதில் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது.

ஆனாலும், வடக்குக் கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்நாட்டுத் தேசிய இனங்களிலொன்று என்ற அடிப்படையில் குறைந்தபட்சம் தமது அடையாளத்தையும் இருப்பையும் இழந்து விடாமல் ஐக்கிய இலங்கை எனும் சட்டகத்துக்குள் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கக் கூடிய நிரந்தரமான அதிகாரப் பகிர்வு பொறிமுறையை அரசியலமைப்பு ரீதியாக அவாவி நிற்கிறார்கள் என்பதும் நிதர்சனமே.

இலங்கைத் தேசியத்தின் இணைந்த கூறாக தமிழ்த் தேசியம் இருக்கலாமே தவிர தமிழ்த் தேசியம் இலங்கைத் தேசியம் என்ற பெயரில் பௌத்த சிங்களப் பேரினவாத மேலாதிக்கக் கருத்தியலுக்குள் கரைந்து போவதற்கு அனுமதிக்க முடியாது.

இத்தகைய தெளிவான எண்ணப்பாட்டின் அடிப்படையில் தான், ரணில் விக்கிரமசிங்க வெல்லக்கூடும் என்று அவருக்கு வாக்களித்தவர்களுள்–சஜித் பிரேமதாச வெல்லக் கூடுமென்று எண்ணியும் தமிழரசுக் கட்சி கேட்டுக் கொண்டதனாலும் அவருக்கு வாக்களித்தவர்களுள்– 'போலி'த் தமிழ்த் தேசியவாதிகள் தமது வார்த்தை ஜாலங்களால் ஊட்டிய உணர்ச்சியிலும் உசுப்பேற்றலிலும் எடுபட்டுத் தமிழ்ப் பொது வேட்பாளரின் 'சங்கு'ச் சின்னத்துக்கும் வாக்களித்தவர்களுள் கணிசமான தொகையினர் தேர்தலில் அனுரகுமார திசநாயக்கா வெற்றி பெற்றதைக் கண்டு அவருக்கு வாக்களித்திருந்திருக்கலாமே என்று ஆதங்கப்பட்டவர்களும் உண்டு.

ஏனெனில், இடதுசாரித்துவம் எப்போதுமே தேசிய இனமொன்றின் தனித்துவமான (சுய நிர்ணய உரிமை உள்ளடங்கலான) அரசியல் அபிலாசைகளை அங்கீகரித்தே வந்துள்ளது.

தற்போது அனுரகுமார திசநாயக்க தலைமை தாங்கும் தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான ஜே வி பி (ஜனதா விமுக்திப் பெரமுன– மக்கள் விடுதலை முன்னணி)யை அதன் ஆரம்ப காலகட்டத்தில் (1965–1989) ரோகண விஜேவீர தலைமை தாங்கிய காலத்திலும் சரி அதற்குப் பின்னர் 1990 இலிருந்து 2014 வரை தலைமை தாங்கிய சோமவன்ச அமரசிங்க காலத்திலும் சரி இறுதியாக 2014 இலிருந்து 2024 ஜனாதிபதி தேர்தல் வரை அனுரகுமார திசநாயக்க தலைமை தாங்கிய போதிலும் சரி ஜே வி பி ஐத் தமிழ் மக்கள் அதன் கடந்த காலத்துத் தமிழர் விரோத செயற்பாடுகளின் காரணமாக எதிரியாகவே நோக்கி வந்தனர். அதில் உண்மையும் உண்டு.

ஆனால் ஜே வி பி யானது அனுரகுமார திசநாயக்க தலைமையில் தேசிய மக்கள் சக்தி (என் பி பி) யாக பரிணாமம் பெற்ற போது அதனைத் திருந்திய–இனவாதமற்ற ஜே வி பி யாக நோக்கத் தலைப்பட்டதின் விளைவு தான் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார திசநாயக்காவுக்கு விழுந்த வடக்கு கிழக்குத் தமிழர்களின் வாக்குகளாகும்.

இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்கா தலைமையிலான இடதுசாரி அரசாங்கத்தை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலினூடாக மேலும் பலப்படுத்த வேண்டுமென்ற எண்ணமும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தமிழர் அரசியலிலும் மாற்றத்தை வேண்டி நின்றவர்களிடையே தலை தூக்கியிருந்தது.

இதற்குக் காரணம் தமிழ்த் தேசியம் பேசிய அரசியற் கட்சிகளிடையேயும் கட்சிகளுக்குள்ளேயும் 'கதிரை'களுக்காக ஏற்பட்ட குத்து வெட்டுக்களும்– அபிவிருத்தி பற்றிப் பேசிய இணக்க அரசியல் கட்சிகளிடம் நிலவிய ஊழல் பலவீனங்களும் இவ்விரு தரப்பினர் மீதும் மக்களுக்கு அருசையை ஏற்படுத்தியிருந்ததால் அனுரகுமாரதிசநாயக்காவின் தலைமையிலான ஆட்சியைத் தேர்தலின் ஊடாக மேலும் வலுப்படுத்த வேண்டுமென எழுந்த எண்ணமும் 'அனுர அலை' மேலெழக் காரணமாயிற்று.

ஆனால், வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை இந்தச் சாதகமான அலையை தேசிய மக்கள் சக்தியின் நிர்வாகம் அரசியல் மதிநுட்பத்துடன் பயன்படுத்தத் தவறவிட்டது போல் தான்படுகிறது. அல்லது வடக்குக் கிழக்குத் தமிழர்களை ஏனோ தானோ என்ற மனப் போக்கில் கையாள முற்படுகிறதா என்ற கேள்வி மேலெழும்புகிறது.

ஏனெனில், வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள யாழ்ப்பாணம்– கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல (அம்பாறை) ஆகிய ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் திருகோணமலை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்குரிய தேசிய மக்கள் சக்தியின் வேட்பு மனுக்களில் இடம் பெற்றுள்ள தமிழ் வேட்பாளர்களை நோக்கும் போது அவர்கள் வாக்காளர்களை வசீகரிப்பவர்களாக மக்களிடையே பிரபல்யம் பெற்றவர்களாக–ஏற்கெனவே அரசியல் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபட்டவர்களாக– சமூக அமைப்புகளைப் பின்புலமாகக் கொண்டவர்களாக இல்லையென்பதே பரவலான அபிப்பிராயம். மொத்தத்தில் அவர்களை 'முகம் தெரியாதவர்கள்' என்றே மக்கள் அழைக்கிறார்கள். இந்த விடயத்தில் வடக்குக் கிழக்குத் தமிழர்களின் மனங்களை தேசிய மக்கள் சக்தி வெல்லத் தவறிட்டது.

மக்கள் கட்சிக்காக மட்டுமே வாக்களிக்க மாட்டார்கள். கட்சிக்காக வாக்களிப்பவர்கள் சிறு தொகையினரே. பெருந்தொகையினர் வேட்பாளர்களின் தகுதி தராதரங்கள்–அவர்களின் மக்களுடனான ஊடாட்டம்–குண நலன்கள் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றைக் கணக்கிலெடுத்துத்தான் வாக்களிப்பார்கள். அதுவே வெற்றி வாய்ப்பைத் தரும்.

இவைகளுக்கு மத்தியில் ஜே வி பி யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தமிழ் மக்களுக்கு 13 ஆவது திருத்தமும் அதிகாரப் பகிர்வும் அவசியமில்லை எனும் சாரப்பட ஊடக அறி விப்புச் செய்துள்ளமை 'தேசிய மக்கள் சக்தி'குறித்த எதிர்மறையான எண்ணங்களுக்கு வடக்கு கிழக்குத் தமிழர்களை இட்டுச் சென்றுள்ளது.


இந்த எதிர்மறைத் தாக்கங்களை ஈடு செய்ய தேசிய மக்கள் சக்தி தேர்தலுக்கு முன்பும் தேர்தலுக்குப் பின்னும் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகமற்ற–பொருளாதார மீட்சி பெற்ற இலங்கையை மட்டுமல்ல தமது அடையாளத்தையும் இருப்பையும் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கக் கூடிய இனவாதமற்றதோர் இலங்கையையும் தான் இலங்கைத் தமிழ்த் தேசிய இனம் காணத் துடிக்கின்றது.


இதற்குத் தேசிய மக்கள் சக்தி காட்டும் திசை தெளிவானதாகவிருந்தால் தான் வடக்கு கிழக்குத் தமிழர்கள் எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க முன் வருவார்கள்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
விபரங்களுக்கு:– 416 841 9600


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! எதிலும் தெளிவான சிந்தனை இருக்கும். மனதில் இருந்த வீண்கவலைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் இருந்த முட்டுக்கட்டைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்கள் மூலம் நன்மை உண்டாகும். வியாபாரத்திற்கு தேவையான நிதி உதவியும் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு தற்காலிக பதவி உயர்வு, கூடுதல் பொறுப்புகள் கிடைக்கப்பெறலாம்.




ரிஷபராசி அன்பர்களே! எதிர்பார்த்த நல்ல செயல்கள் நடக்கும். கடன் பிரச்னைகள் தொல்லை தராமல் இருக்கும். உங்களது செயல்களுக்கு இருந்த எதிர்ப்புகள் நீங்கும். வழக்கு விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். எதிர்பார்த்த பணவரத்து இருந்தாலும் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். போட்டிகள் தொல்லை தராமல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் பணிசுமை குறைந்து காணப்படுவர்.





மிதுனராசி அன்பர்களே! சாமர்த்தியமாக பேசி காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நன்மையாக இருக்கும். பூர்வீக சொத்து க்களில் இருந்த தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். பார்ட்னர்கள் ஒத்துழைப்புடன் வியாபாரத்தை விரிவாக்கம் செய்வீர்கள். ஏற்றுமதி சம்பந்தமான துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும்.





கடகராசி அன்பர்களே! சுபகாரியங்களில் கலந்து கொள்வீர்கள். இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். தேவையற்ற கவலைகள் நீங்கும். உங்களை பற்றி விமர்சனம் செய்து வந்தவர்கள் அதனை விட்டு விடுவர். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பர். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.





சிம்மராசி அன்பர்களே! துணிச்சலாக எதையும் செய்து முடிப்பீர்கள். பூர்வீக சொத்துக்களில் இருந்த சிக்கல்கள் தீரும். அரசாங்கம் மூலம் லாபம் உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி விறுவிறுப்படையும். கடன் பாக்கிகள் வசூலாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். உத்தியோகத்தில் பணிக் கஷ்டங்கள் குறையும்.




கன்னிராசி அன்பர்களே! நினைத்த காரியம் நிறைவேறும். எதையும் மனோ தைரியத்துடன் செய்து முடிப்பீர்கள். வீடு தொடர்பான பணிகள் விரைந்து நடக்கும். நெருக்கடியான நேரத்தில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் லாபம் உண்டாகும். எதிர் பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் பற்றி ஆலோசிப்பர்.குடும்பத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறி மகிழ்ச்சியான நிலை வரும்.





துலாம் ராசி அன்பர்களே! எதிலும் அவசரப்படாமல் நிதானமாக முடிவு எடுப்பது நன்மை தரும். மனதில் இருந்த கவலைகள் நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைத்தாலும் செலவும் அதிகரிக்கும். புதிய ஆர்டர்கள் பெறுவதற்கு கூடுதல் கவனம் செலுத்த வேண்டி இருக்கும். உத்யோகத்தில் தயக்கத்துடன் தங்களது பணிகளை செய்ய வேண்டி இருக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும்.





விருச்சிகராசி அன்பர்களே! கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கடும் முயற்சிக்குப் பின் வெற்றி கிடைக்கும். வீடு, வாகனம் போன்றவற்றை புதுப்பீர்கள். மனோ தைரியம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். புதிய ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் திறமையாக பணிகளை செய்து பாராட்டு பெறுவர். பதவி உயர்வும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் அதிகரிக்கும்.








தனுசராசி அன்பர்களே! எடுத்த காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். வீண்கவலை நீங்கும். ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரம் விருத்தியடையும். ஏற்கனவே வரவேண்டி இருந்து வராமல் நின்ற ஆர்டர்கள் வந்து சேரும். உத்யோகத்தில் வேலை பளு, வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் இருந்த பிரச்னைகள் குறையும். புதிய வீடு வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.




மகரராசி அன்பர்களே! மனதில் இருந்த கவலைகள் நீங்கி நிம்மதி உண்டாகும். வர வேண்டிய பணம் வந்து சேரும். சாமர்த்தியமான பேச்சினால் காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். அடிக்கடி கனவுகள் வரக்கூடும். தொழில் வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து மனநிறைவு அடைவர். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் நீங்கும்.




கும்பராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். தந்தை மூலம் செலவு உண்டாகலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான நிலை காணப்படும் குடும்பத்தில் பிரச்சனை தலைதூக்கி பின்னர் சரியாகும்.




மீனராசி அன்பர்களே! மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். உடல் ஆரோக்கியத்தை தரும். வீண் கவலை நீங்கும். தடைபட்ட காரியங்களில் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலை காணப்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இருந்த தடைகள் விலகும். போட்டிகள் குறையும், குடும்பத்தில் இருப்பவர்களுடன் இணக்கமான போக்கு காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## தமிழர்களின் யதார்த்தமான கோரிக்கைகளை...

(17ம் பக்கத் தொடர்ச்சி) அதிரடியாகச் செய்ய முடியாது. சட்டம், விதிமுறை என்பவற்றுக்குட்பட்டே செயற்படுத்த வேண்டியதாக இருக்கும். அதற்கு அப்பால் மாற்றங்களை நிகழ்த்த வேண்டுமானால் அதற்கு அரசியலமைப்பை (அரசமைப்பை) மாற்ற வேண்டும். அதன்பின்பே மாற்றங்களை முழுமையான அளவில் அல்லது திருப்தியான முறையில் எதிர்பார்க்கலாம். இது NPPயின் நிலை என்றால்

2. தமிழ், முஸ்லிம் தரப்புகள் தம்மை நிலைப்படுத்துவது எப்படி? தமது அரசிலையத் தொடர்வது எவ்வாறு என்ற குழப்பத்திற்குள்ளாகியுள்ளன. ஏற்கனவே சொல்லப்பட்டதைப் போல ஒரு Formula அரசியலையே தமிழ் முஸ்லிம் தரப்புகள் செய்து வந்தன. அதற்குத் தோதாக தெற்கிலும் சு.க அல்லது ஐ.தே.க அல்லது பொதுஜன பெரமுன இருந்தது. இதனால் பழகிய வடிவத்தில் அதிக சிரமம் இல்லாமல் தமது அரசியலை இவை தொடரக் கூடியதாக இருந்தது.

இதை இந்தத் தடவை NPP உடைத்து விட்டது. அது தேசிய அளவில் தன்னை விஸ்தரித்ததால், பிராந்தியத்தில் செல்வாக்கைக் கொண்ட தரப்புகளும் அடிபடும் நிலைக்குள்ளாகி விட்டன.

குறிப்பாகத் தமிழ்த்தரப்பு மிகப் பல வீனப்பட்டுள்ளது. போதாக்குறைக்குத் தமிழ் வாக்குகளைப் பிரிக்கக்கூடிய வகையில் அவற்றுக்கிடையிலான போட்டிகள் நிலவுகின்றன. கூடவே சுயேச்சைக் குழுக்களும்.

உண்மையில் இந்தச் சூழலில் தான் இதை எப்படிக் கையாள்வது அல்லது இந்த நிலை ஏற்படாமல் தடுப்பது என்பதைக் குறித்துச் சிந்திக்கக் கூடிய தரப்புகள் வேலை செய்திருக்க வேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ்த்தேசியப் பொதுக்கட்டமைப்பும் பாராளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே செயற்பட்டிருக்க வேண்டும். உண்மையில் அவற்றுக்கு இப்பொழுது தான் வேலை. அதாவது பாராளுமன்றத் தேர்தலில் தான் வேலை. ஆனால், கைமுந்திச் செயற்பட்டதால் தலைக்கு நாசம் என்ற மாதிரி அவற்றின் வலுக்குன்றி விட்டது.

உண்மையில் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுச் சபையும் தமிழ்த்தேசியக் கட்டமைப்பும் தலையிட்டிருக்கவே கூடாது. அதில் தலையிட்டதனால் தான் பாராளுமன்றத் தேர்தலில் அவற்றுக்கான இடமில்லாமற் போனது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் வாக்குகள் சிதறக் கூடாது. தமிழ்த்தேசியமும் தமிழ்ப்பலமும் பலவீனப்படக் கூடாது. தமிழ் மக்கள் தேசமாகத் திரள வேண்டும் என்றுதான் பொதுச் சபையும் பொதுக்கட்டமைப்பும் உருவாக்கப்பட்டன. செயற்பட்டன. விளைவாக நடந்திருப்பது என்ன? எதிர்மாறு தானே!

ஆகவே தமிழ் மக்கள் சிதறிப் போகும் நிலையை பொதுச் சபையும் பொதுக் கட்டமைப்பும் உருவாக்கியுள்ளன. இதனுடைய விளைவே பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கியுள்ள அளவுக் கதிகமான போட்டியாளர்களும் தேர்தலில் சிதையப் போகும் வாக்குகளுமாகும். இந்த நிலைக்கு பொதுச் சபையும் பொதுக்கட்டமைப்பும் பொறுப்பேற்க வேண்டும்.

இதனையே இவ்வாறான ஒரு நிலைமையே உருவாகும் என இந்தப் பத்தியாளர் உட்பட கூர்மையாக அரசியலை நோக்குவோர் பலரும் மிகத் தெளிவாக அப்போது தெரிவித்திருந்தனர். ஆனாலும் அதைப் பொதுச் சபையினரும் பொதுக்கட்டமைப்பும் நிராகரித்தனர். மட்டுமல்ல, இது எதிர்த்தரப்புக்கு சிங்கள அதிகார வர்க்கத்துக்கு வாய்ப்பை அளிக்கும் எனவும் கூறப்பட்டது. அது யதார்த்தமாகியுள்ளது.

எல்லாவற்றுக்கும் அப்பால் இன்று உருவாகியிருக்கும் புதிய அரசியற் சூழலானது இலங்கையின் எதிர்கால அரசியலில் புதியதொரு படிப்பினையை நிச்சயமாக அனைத்துத் தரப்புக்கும் தரப்போகிறது. படிப்பினைக்கு அப்பால் நல்லதொரு சூழலை, நல் வாய்ப்புகளைத் தருமாக இருந்தால் அதுவே சிறப்பாகும். நெகிழ்ந்திருக்கும் சிங்களத் தேசியவாதம் தமிழ்த் தேசியவாதத்தின் கூர்முனையை மழுங்கடிக்கும் விதமாகச் செயற்பட்டால் மகிழ்ச்சி. எதிரெதிர்த் தேசியவாதங்களின் உராய்வு முடிவுறுத்தப்படுவதற்கான காலம் கனிந்துள்ளது. புதிய யுகம் ஒன்று பிறக்கும் சூழல் உருவாகியுள்ளது. ஆனால், அது ஒன்றை ஒன்று மறைப்பதாக இல்லாமல் ஒன்றை ஒன்று மதிப்பதாகவும் எல்லாவற்றையும் சமநிலைப்படுத்துவதாகவும் சமநிலை கொள்வதாகவும் இருக்க வேண்டும்.

தமிழ்த்தேசிய அரசியல் பலவீனப்பட்டுள்ளது. முஸ்லிம் அரசியல் சரிவுக்குள்ளாகியள்ளது என வரலாற்றுக் கணக்குப் பார்க்க முற்பட்டால், அதனுடைய விளைவுகள் வரலாற்றுத் தவறுகளாக மட்டுமல்ல, நாட்டின் தவறாகவும் ஆகி விடும். நாட்டின் தவறு என்பது ஆட்சியின் தவறு தான்.

## இனியும் தும்புத்தடியை நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப்பார்களா?

19ம் பக்கத் தொடர்ச்சி) இவர்களுடைய வாக்குகள் வழமைக்கு மாறாக எதிர்த்தரப்புகளுக்குச் செல்ல வாய்ப்புண்டு. அதற்காக டள்ளஸ் தேவானந்தா, பிள்ளையார் போன்றோருக்கு அவை கிடைக்காது. மாறாக அனுரவுக்கும், சஜித்திற்கும் பிரியப்போகின்றன.

இதற்கொரு காரணமும் உண்டு. இதில் ஒரு சாரார் யோசிக்கின்றனர், இப்போதுள்ள சூழலில் அனுரவுக்கு ஆதரவளித்தால், அது ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு உதவியாக இருக்கும் என.

ஆனால், இன்னொரு சாரார் இதை மறுத்து, பேராதரவுடன் அனுர அதிகாரத்தைக் கைப்பற்றினால், அது நாட்டுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் எதிரானதாகவே மாறும். ஆகவே, ஒரு வலுவான எதிர்த்தரப்பு — எதிர்க் கூட்டணி அல்லது கூட்டரசாங்கம் ஒன்று அமையக் கூடியவகையில் தம்முடைய ஆதரவு இருக்க வேண்டும். ஜனநாயக வெளி பாதுகாக்கப்பட வேண்டும் என. இவர்கள் சஜித்தை ஆதரிப்பதற்கு முற்படுவர். இப்போதுள்ள சூழலும் அப்படித்தான் உள்ளது.

2. அரச தரப்பை அனுசரித்து நிற்கும் டக்ளஸ் தேவானந்தா, பிள்ளையான் போன்றோருக்கான ஆதரவுத் தளம் சற்று வீழ்ச்சியடைகிறது. இவர்களை அனுரவை ஏற்றுக் கொள்ளவில்லை, ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதால் இந்தச் சரிவு எனலாம். ஆகவே இவற்றின் விளைவுகள் நிச்சயமாகத் தேர்தல் முடிவுகளில் நிச்சயமாகப் பிரதிபலிக்கும். இன்னும் சொற்ப நாட்கள் மட்டுமே உள்ளன, இதை அறிந்து கொள்வதற்கு.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# கனடா பழங்குடி இன மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரிய ஹரி

கனடிய அரசாங்கத்தின் சார்பில் பழங்குடியின சமூகத்தினரிடம் பழங்குடியின விவகார அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி பகிரங்க மன்னிப்பு கோரியுள்ளார். ஒன்றாரியோ பழங்குடியின சமூக மக்களின் பணத்தை துஷ்பிரயோகம் செய்தமைக்காக அவர் இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளார்.

சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. அந்த சம்பவத்திற்காக தற்பொழுது அமைச்சர் ஹரி ஆனந்த சங்கரி மன்னிப்பு கோரியுள்ளார்.

1862 ஆம் ஆண்டு பழங்குடியின மக்களின் காணிகளை விற்பனை செய்து கிடைக்கப் பெற்ற பணத்தை அந்த மக்களுக்கு வழங்காது வேறு அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் மேற் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அந்த மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக இவ்வாறு மன்னிப்பு கோரப்பட்டுள்ளதுடன் அந்த மக்களுக்கு தற்பொழுது நட்டஈடு வழஙகப் பட்டு வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இது இவ்வாறிருக்க உலகின் தலை சிறந்த நாடுகள் பட்டியலில் கனடா நான்காவது இடத்தை பிடித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி



வெளியிட்டுள்ளன. U.S. News & World Report என்னும் அமெரிக்க ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள உலகின் தலை சிறந்த நாடுகள் பட்டியலிலேயே கனடா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதன் போது சாகசம், கலாச்சார தாக்கம், தொழில் முனைவு, பாரம்பரியம், தொழில் செய்ய வெளிப்படைத் தன்மை, ஆற்றல் மற்றும் வாழ்க்கைத்தரம் முதலான பல்வேறு காரணிகளின் அடிப்படையில் 73 நாடுகள் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

அந்தவகையில் ஒவ்வொரு காரணிக்கும் புள்ளிகள் வழங்கப்பட்தன் அடிப்படையில், 94.1 என்ற புள்ளிகளை கைப்பற்றி கனடா பட்டியலில் நான்காவது இடத்தை பெற்றுள்ளது. இந்நிலையில், உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் முதலிடத்தை சுவிட்சர்லாந்து பெற்றுள்ளது. அத்துடன், இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களை ஜப்பான் அமெரிக்கா பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் ரத்து!



முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை இரத்து செய்யக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அத்துடன் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு வழங்கப்பட்ட சலுகைகளை அரசாங்கம் நீக்கியதன் காரணம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப் பினார். சந்திரிக்காவின் கணவரின் கொலையுடன் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தொடர்புபட்டுள்ளது. அவருக்கும் குண்டு வெடிப்பினால் கண்ணில் காயம் ஏற்பட்டுள்ளது.

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க எனக்கு ஒரு போதும் ஆதரவளிக்கவில்லை. மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதற்காக மட்டுமே நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டுள்ளோம். அதேநேரம், மகிந்த ராஜபக்ஷ, மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை இழந்தமை வேறு விடயம், எனினும் அவர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமையினை கருத்திற் கொண்டு அவரின் பாதுகாப்பை கருத்தில் கொள்ள வேண்டும். தமக்கு எவ்வித சலுகைகளும் தேவையில்லை எனவும், எனினும் ஏனைய ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

